(பக்)கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

(...)17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:308


(...)ள் அள்ளச் சென்ற போது கைதான

## (...)ஏழு படையினரின் பெற்றோர் (...)மலையில் புலிகளுடன் பேச்சு!

கொழும்பு,ஒக்.1

(...)கோணமலையில் புலிகளால் (...)வைக்கப்பட்டிருக்கும் ஏழு இரா(...)னரதும் பெற்றோர் நேற்று (...)ணமலையில் விடுதலைப் புலி(...)ரதிநிதிகளைச் சந்தித்துத் (...)லைகளின் விடுதலை குறித் (...)ச்சு நடத்தினர்.

கொழும்பிலிருந்து திருகோண மலைக்குச் சென்ற இராணுவத்தினரின் பெற்றோர் முதலில் திருமலை மாவட்ட இராணுவத் தளபதியையும் மனித உரிமைகள் ஆணைக் குழுவினரையும் சந்தித்துப் பேசினர். அதனையடுத்து திருகோணமலையில் புலிகளின் அர

(14ஆம் பக்கம் பார்க்க)

இன்று காலை யாழ்.நகரில் நடைபெறும்

## சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வில் பிரபல கிரிக்கெட் நட்சத்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

சர்வதேச சிறுவர் தினமான இன்று சிறுவர்களுக்கு மகிழ்வூட்டி அவர்களை உற்சாகப்படுத்தும் நிகழ்வு ஒன்று யாழ்.நகரில் நடைபெறவிருக் கிறது.

பிரபல கிரிக்கெட் நட்சத்திரங் கள் சிலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவரும் பிரபல கிரிக்கெட் வர்ணணையாளருமாகிய ரொனி கிறீக், பிரபல கிரிக்கெட் வீரர் ரொஷான் மகாநாம, பிரபல விக்கெட் காப்பாளர் ருமேஷ் களுவிதாரண ஆகியோரும் இலங்கை அணியின் வேறுசில கிரிக்கெட் நட்சத்திரங் களும் இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

யாழ்.துரையப்பா ஸ்ரேடியத்தில் இன்று காலை 9.00 மணிக்கு இவர் கள் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# (ம)னிதாபிமான மற்றும் புனரமைப்பு (உ)தவிக்கு ஜப்பான் விரைகின்றது

## (வ)டக்கு - கிழக்கின் தேவைகளை அறிய (12)ஆம் திகதிக்குள் 10 பேர் குழு வருகை

கொழும்பு,ஒக்ரோபர்1

**(...)ாய்லாந்தில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே முதல் சுற்று சமாதானப் (பேச்)சு வெற்றிகரமாக நடைபெற்றதையடுத்து வடக்கு-கிழக்கிற்கு மனிதாபி(மான) மற்றும் புனரமைப்பு உதவிகளை விரைவில் வழங்கவேண்டும் என்ற (...)வம் ஜப்பான் அரசிடம் மேலோங்கி நிற்கிறது. வடக்கு - கிழக்குத் தேவை(க)ளை இனங்கண்டு மதிப்பீடுகளைச் செய்வதற்கு எதிர்வரும் 12ஆம் திகதிக்(குள்) 10 பேர் கொண்ட குழு ஒன்றை அனுப்ப ஜப்பான் அரசு முடிவு செய்(திரு)க்கிறது.**

(...)வைகளை மதிப்பீடு செய்தல் (...)ட்ட அமுலாக்கல் குழு (...)க் குழுவில் இடம்பெறும் (...)ல் இருவர் ஜப்பான் வெளி(...) மச்சின் உயர் அதிகாரிகள், (ஜ)ப்பான் ஜே.ஐ.சி.ஏ.தலைமை அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள். மிகுதி 5பேரும் வெவ்வேறு துறைக ளில் நிபுணத்துவம் பெற்ற ஆலோச கர்கள்.

இந்தக் குழு முதற்படியாக வழங்கப் படவேண்டிய அவசர உதவி பற்றிக் கவனம் செலுத்தும்.

முக்கியமாக உள்ளூரில் இடம் பெயர்ந்து இருப்பவர்களின் தேவை கள் பற்றி குழு கருத்தில்கொள்ளும். மருத்துவ சுகாதார சேவைகள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு நிபந்தனையின் பேரில் ஆதரவு

### ஹிஸ்புல்லாவின் நிலைப்பாடு இது

சிங்கள மக்களிடையேயும் எமது பிரச்சினையை நேரடியாக எடுத்துச் செல்லவே தேசிய ஐக்கிய முன்னணி (நு-ஆ) தலைவி பேரியல் அஷ்ரப் ஜே.வி.பி மேடைகளில் ஏறினார். ஆயி னும், ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இல்லை. தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பொ.ஐ.மு .எம்.பியான ஏ. எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா பேட்டி யொன்றில் இவ்வாறு கூறினார். சிங் களத் தினசரி ஒன்றுக்கு அவர் பேட்டி யளித்திருக்கிறார்.

"வடக்கு- கிழக்கு மாகாணங்க ளில் முஸ்லிம்களுக்கென தனியான ஓர் அலகு தேவை என்று கூறுகிறோம். அச்சபைக்கு ஜே.வி.பி. எதிர்ப்புக் காட்டியிருக்கிறது. அதன் உண்மை நிலையை அவர்களுக்கு உணர்த் தவே அந்த மேடைகளில் ஏறினோம். அந்த மேடைகள் ஜே.வி.பி. மேடை களல்ல; பொதுவான மேடைகள்" என்று அவர் கேள்வியொன்றுக்குப் பதி லளித்திருக்கிறார்.

பேட்டியில் அவர் மேலும் கூறிபி

(14ஆம் பக்கம் பார்க்க)

## (ர)ணில்மீது சந்திரிகா (லஞ்)சக் குற்றச்சாட்டு!

கொழும்பு,ஒக்.1

(அப்)போதைய பிரதமர் ரணில் விக் (ரமசி)ங்க, முன்னர் கல்வி அமைச் (சராக) இருந்த சமயம் பாடசாலை (க்கு ம)ாணவர்களைச் சேர்ப்பதற்காக (...) வாங்கினார் என்று குற்றம் (சாட்டி)னார் ஜனாதிபதி சந்திரிகா (...)ங்க.

(...)த வார இறுதியில் அநுராத(புரத்தில் இ)டம்பெற்ற 'ஜனாதிபதி மிலே(...)மைப்பரிசில்' வைபவத்தில் (...)ண்டு உரையாற்றும்போதே (...)ருத்துக்களை அவர் கூறி னார். அங்கு ஜனாதிபதி கூறியதாவது:-

கொழும்பு றோயல் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக கடநத காலங்களில் 25ஆயிரம் ரூபா வைப் பெற்றுக் கொண்டஒரு நபர் இருந்துள்ளார். இந்தப் பணத்தின் ஒரு பகுதி அப்போதைய கல்வி அமைச்சருக்குக் கிடைத்துள்ளது.

எனது பிள்ளையை றோயல் கல் லூரியில் அனுமதிக்க விண்ணப்பித்த போது இந்த நபர் 25ஆயிரம் ரூபா வைக் கோரினார். நான் இதற்கு மறுத் ததால் எனது பிள்ளையை றோயல் கல்லூரியில் சேர்க்கமுடியாமற்போனது.

அன்று கல்வி அமைச்சராக இருந்த நபர் இன்று நாட்டின் பிரதமர்.

ஒரு நாட்டின் கல்வித் துறையில் அரசியலைக் கலக்கக்கூடாது.

கல்விமான்கள், புத்திஜீவிகள் ஆகியோரின் மேற்பார்வையிலேயே கல்வி நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவேண்டும்.

தறபோதைய அரசியல் துறையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.பல்கலைக்கழக

## வெளிவாரி இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பொதுக் கலைமாணி இறுதிப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட் டன. பரீட்சார்த்திகள் தமது பெறு பேறுகளை இன்று முதல் பல்கலைக் கழகத்தில் பார்வையிடலாம் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை -

உள்வாரி இறுதிப் பரீட்சை முடிவு கள் பலவும் நேற்று வெளியிடப்பட் டிருக்கின்றன.

முதுகல்வியியல் மாணி இறுதி(ப்) பரீட்சை, பட்டப்பின் கல்வித் தகை மைச் சான்றிதழ் இறுதிப் பரீட்சை, பொதுக் கலைமாணி இறுதிப் பரீட்சை, சிறப்புக் கலைமாணி மூன் றாம் ஆண்டு இறுதிப்பரீட்சை விலங் கியல், தாவரவியல், இரசாயனவியல், கணிதம், புள்ளிவிவரவியல் சிறப்புப் பட்டம் ஆகியவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

(ஐ)

## (வை)கோ விரைவில் (வி)டுதலையாவாரா?



(...)டா' சட்டத்தின் கீழ் கைதான ஒருவரை சந்(தேகத்த)ின் பேரில் 90 நாள்களேதான் நீதிமன்ற காவ(லில் வை)க்கமுடியும். எனவே, இச்சட்டத்தின் கீழ் கைது (செய்யப்)பட்டு 85 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்(டுள்ள) வைகோ, எதிர்வரும் 4 ஆம் திகதி விடு(தலையா)வாரா? அல்லது புதிய வழக்கு ஏதும் அவர் (மீது தொடு)க்கப்பட்டு அதனடிப்படையில் அவர் தொடர்ந்து (தடுத்து) வைக்கப்படுவாரா - இவ்வாறு கேள்வி எழுந்(துள்ளது).

(...)நாள்கள் சிறையில் கழித்துள்ள வைகோவுக்கு இதுவரை குற்றப்பத்திரம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. (...)த்தில் விசாரணையும் தொடங்கவில்லை.

(ஐ)

## பதினைந்து வயது சிறுமியை குதறி கொன்று தீர்த்த மனித மிருகம்

### மக்களிடம் சிக்கி, புலிகள் ஊடாக பொலீஸில்

கொழும்பு,ஒக்.1

வெறிபிடித்த மனித மிருகம் ஒன்று 15வயதுச் சிறுமி ஒருத்தியை குதறிவிட்டு, அவளை கொன்று தீர்த்த பரிதாபம் நேற்றுமுன்தினம் கிழக்கில் நடந்தது. அந்த மனித மிருகம் மக்களிடம் வகையாக மாட் டிக் கொண்டது. புலிகள் ஊடாக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று பிர தேச செயலர் பிரிவில் மாவடி வேம்பு முதலாம் குறிச்சியிலேயே இச்சம் பவம் இடம்பெற்றது.

வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு வட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமி, சுந்தரலிங்கம் சுதாமலர் (வயது15) என்பவர் ஆவார். சம்பவம் தொடர் பாக கமல்(வயது23) என்ற சந்தேக நபர் அப்பகுதி மக்களால் பிடிக்கப் பட்டு விடுதலைப் புலிகளின் ஏறாவூர் அரசியல் அலுவலகத்தில் ஒப்படைக் கப்பட்டார். புலிகள் சந்தேகநபரை விசாரணை செய்துவிட்டு நேற்று பொலீஸில் ஒப்படைக்க இருந்தனர்.

இறந்த சிறுமியின் கழுத்தில் கூரான ஆயுதம் ஒன்றினால் ஆழமாக வெட் டப்பட்டுள்ளது. இதனால் இரத்தக் குழாய்களும், சுவாசக் குழாயும் துண் டிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் மூச் சுத் திணறி மரணம் சம்பவித்திருக் கிறது. சிறுமியின் உதடு, மார்பு, பெண்

(14ஆம் பக்கம் பார்க்க)

(இ)ளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### ஐ.சி.சி. சம்பியன் கிண்ண இறுதிப்போட்டி:

# மீண்டும் ஆட்டம் மழையினால் பாதிப்பு! சம்பியன் கிண்ணம் பகிர்ந்தளிப்பு!!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இரண்டாவது நாளாகவும் மழையினால் பாதிக்கப்பட்டது. இதனால் வெற்றிக்கிண்ணமும் பரிசுப் பணமும் இலங்கை, இந்தியா ஆகிய இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இத்தொடரின் இறுதிப் போட்டி ஞாயிறன்று நடைபெற்றது. எனினும், மழை காரணமாக அன்றைய ஆட்டம் கைவிடப்பட்டது. மேலதிக நாளான நேற்று மீண்டும் புதிதாக போட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஆர்.பிரேமதாஸ அரங்கில் இப்போட்டி நடைபெற்றது.

நேற்றும் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆனால், சஹீர்கான் வீசிய முதற் பந்து வீச்சிலேயே இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய ஆட்டமிழந்தார்.

17 ஓவர்களில் 71 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் 4 விக்கெட்டுக்களை இழந்தது இலங்கை அணி. எனினும், ரஸல் ஆர்னல்டும், மஹேல ஜயவர்த்தனவும் 5ஆவது விக்கெட்டுக்காக 118 ஓட்டங்களைப் பெற்றனர்.

50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 222 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி. ஞாயிறன்று இவ்வணி 244ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை இந்தியா இலகுவாகக் கடந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்திய அணி 8.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கடும் மழை ஆரம்பித்தது. இதனால் நேற்றும் ஆட்டம் கைவிடப்பட்டது.

வீரேந்தர் ஷேவாக் 22 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஆட்டம் கைவிடப்பட்டதை அடுத்து ஐ.சி.சி. சம்பியன் கிண்ணமும் 3,00,000 டொலர் பரிசுப் பணமும் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. (ஐ)



ஆசிய விளையாட்டு விழா தொடக்க நிகழ்ச்சியின் போது...

# ஆசிய விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பம்

## விளையாட்டு

14ஆவது ஆசிய விளையாட்டு விழா ஞாயிறன்று கோலாகலமாக ஆரம்பமாகியது. தென்கொரியாவின் புசான் நகரில் உள்ள ஆசிய விளையாட்டு விழாவுக்கான பிரதான அரங்கில் ஆரம்ப வைபவம் நடைபெற்றது. தென்கொரிய ஜனாதிபதி கிம் டே ஜுங் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விழாவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். விழா ஆரம்பிக்கப்பட்டவுடன் புசான் நகர மக்கள் தமது கார்களின் ஹோர்ணை ஒலிக்கச் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர். கண்ணைக் கவரும் வாண வேடிக்கைகளும் நடைபெற்றன. சுமார் 60 ஆயிரம் பார்வையாளர்கள் அரங்கில் கூடியிருந்தனர். போட்டியாளர்கள் சத்தியப்பிரமாணம் செய்ததைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது.

ஜுடோ போட்டியாளர்களான தென்கொரியாவின் ஹா ஹியூங்ஜு, வடகொரியாவின் கிசன் ஹுய் ஆகியோர் இணைந்து தீபத்தை ஏற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப வைபவத்தின்போது நடைபெற்ற அணிவகுப்பில் சுமார் 6ஆயிரத்து 700 போட்டியாளர்களும் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

கொரிய அகர வரிசைப்படி நேபாளக் குழுவினர் அணிவகுப்பின் முன்வரிசையில் சென்றனர்.

அணிவகுப்பில் வடகொரியா, தென்கொரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒரே அணியாகப் பங்குபற்றினர். இலங்கைக் குழுவினர் சுஸந்திகா ஜெயசிங்க தலைமையில் அணிவகுத்துச் சென்றனர். இலங்கையின் முன்னணி மெய்வல்லுநர்களான சுகத் திலகரத்தின, ஸ்ரீயானி குலவன்ஸ, தமயந்தி தர்ஷா, ரங்க விமலவன்ஸ உட்பட எழு பேர் அணிவகுப்பில் பங்குபற்றவில்லை. இவர்கள் சுகவீனமுற்றுள்ளனர் என இலங்கைக் குழுவின் தலைமைப் பொறுப்பாளரான எச்.யு.சில்வா தெரிவித்தார்.

44நாடுகளைச் சேர்ந்த 11ஆயிரம் போட்டியாளர்கள் இவ்விழாவில் பங்குபற்றுகின்றனர்.

**முதல் தங்கம் சீனாவுக்கு**

இவ்விழாவின் முதலிரு தங்கப் பதங்கங்களையும் சீனா வென்றது. ஆண்களுக்கான தனிநபர் வாள் சண்டைப் போட்டியில் சீன வீரர் [illegible]ைறவின், தென்கொரியாவின் கிம் ஹாங் ஹுனை 15-11 புள்ளிகளால் தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றார். இவ்விழாவின் முதலாவது தங்கப் பதக்கம் இது. சில நிமிடங்களின் பின் மற்றொரு வாள் சண்டைப் போட்டியில் சீன வீரர் ஷ கான் சக நாட்டவரான வாங் லீயை தோற்கடித்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.



யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை வலைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் சித்தியடைந்த ஒருவருக்கு பதக்கம் அணிவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்: வசந்தன்)

# ஓய்வுபெறும் தீர்மானத்தை அரவிந்த மீள் பரிசீலனை செய்யவேண்டும்!

## வட்மோர், ஜயசூரிய கோரிக்கை

"ஓய்வு பெறும் தீர்மானத்தை அரவிந்த டி சில்வா மீள் பரிசீலனை செய்ய வேண்டும். உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னரும் அவர் அணியில் இடம்பெற வேண்டும்."

- இவ்வாறு இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய, பயிற்றுநர் டேவ் வட்மோர் ஆகியோர் கூறியுள்ளனர். உலகக் கிண்ணப் போட்டிகளின் பின் ஓய்வு பெறவுள்ளதாக அரவிந்த டி சில்வா கூறியுள்ளார். இது தொடர்பாக பயிற்றுநர் டேவ் வட்மோர் கருத்துத் தெரிவிக்கையில் -

"எவ்வளவு காலம் வரை விளையாட வேண்டுமென்பதை அவரே தீர்மானிக்க வேண்டும். ஆனால், உலகக் கிண்ணப் போட்டிகள்வரையேனும் அவர் போட்டிகளில் பங்குபற்றவேண்டும்.

"ஒரு பயிற்றுநர் என்ற வகையில எனது கருத்தின்படி அவர் அணியில் இடம்பெறுவது அணிக்குச் சிறப்பளிக்கும். துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகியவற்றில் மட்டுமல்ல மற்றும் பல விடயங்களிலும் அவரது அனுபவம் அணிக்கு உதவும்."

- இவ்வாறு டேவ் வட்மோர் கூறினார்.

இலங்கை அணியின் தலைவர் சனத் ஜயசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "அரவிந்த இன்னும் பல வருடங்கள் விளையாட முடியுமென நான் நம்புகிறேன். உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னரும் அவர் அணியில் இடம்பெற்றால் அணித் தலைவர் என்ற ரீதியில் நான் மகிழ்ச்சியடைவேன்" - என்றார்.

(ஐ)



யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள், கழகப் பயிற்றுநர்கள் மற்றும் வீரர்களுக்கு பயிற்சி வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ள இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்திலிருந்து வருகைதந்த பயிற்சியாளர் குழுவினரைப் படத்தில் காணலாம். இடமிருந்து வலமாக ஏ.எவ்.சி. 'சி' தரப் பயிற்றுநர் ஏ.சத்தியராஜா, இலங்கை தேசிய அணிப் பயிற்றுநர் சுமித் வல்பொல, ஏ. எவ்.சி. 'பி' தரப் பயிற்றுநர் டி.சந்திரசிறி.

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**ஞானாசாரியார் கல்லூரியில**

★ 16 வயதுப் பிரிவு - தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் இமையாணன் அ.த.க.வித்தியாலயம்.

★ 18 வயதுப் பிரிவு - தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் ஞானசாரியார் கல்லூரி.

**திக்கம் மைதானம்**

★ 16வயதுப் பிரிவு - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

★ 18 வயதுப் பிரிவு - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.

**நெல்லியடி ம.மவில்**

★ 16 வயதுப் பிரிவு - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.

★ 16 வயதுப் பிரிவு - வல்வை சிதம்பராக் கல்லூரி எதிர் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை.(எ-ரி-118)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் நல்லூர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.

★ அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

★ யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம் எதிர் கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலம். (எ-ரி-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் 14 வயதுப் பிரிவினர்களுக்கான அரையிறுதி ஆட்டமும், 20 வயதுப் பிரிவினருக்கான கால் இறுதி ஆட்டமும் இடம்பெறவுள்ளது. (எ-ரி-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் சங்குவேலி ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கோண்டாவில் மறுமலர்ச்சி வி.கழகமும், சுன்னாகம் காந்தரூபன் வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (எ-ரி-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணி முதல் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

★ புத்தூர் ஆவரங்கால் நடராச இராமலிங்கம் வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

★ சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை எதிர் அச்சுவேலி மத்திய கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

★ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். (எ-ரி-86)

## ஜேர்மன் டெனிஸ் தொடரில் செரீனா - மிஸ்கினா மோதல்

ஜேர்மனியில் நடைபெறும் லீப்ஸிக் டெனிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், ரஷ்ய வீராங்கனை அனஸ்டேஷியா மிஸ்கினா ஆகியோர் தெரிவாகியுள்ளனர். அரையிறுதிப் போட்டியில் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்ரின் ஹெனினை வில்லியம்ஸ் தோற்கடித்தார்.

மற்றோர் அரையிறுதியில் தற்போதைய சம்பியனான கிம்கிளிஜ்ஸ்டர். அனஸ்டேஷியா மிஸ்கினா தோற்கடித்தார்.

செரீனா இவ்வருடம் ஏற்கனவே 7 சுற்றுப் போட்டிகளில் சம்பியனாகியுள்ளார். தரவரிசையில் அவர் உலகின் முதல்நிலையிலுள்ளார்.

ஆனால், தாம் இன்னும் களைத்து விடவில்லை என்று கூறுகிறார் செரீனா.

மிஸ்கினா தரவரிசையில் 12ஆவது இடத்தை விகித்தார். அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ள புதிய தரவரிசையில் அவர் 10ஆவது இடத்தில் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)



## அமெரிக்காவின் அழுத்தத்துக்கு மத்தியிலும்

# ஆயுதக் கண்காணிப்புக் குறித்து ஐ.நா. நேற்று ஈராக்குடன் பேச்சு

வாஷிங்ரன்,ஒக்.1

ஈராக்குக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில புதிய - கடுமையான - பிரேரணை ஒன்றை நிறைவேற்றிவிட அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் செய்துகொண டிருக்கும் அதேநேரம், ஐ.நா. ஆயுத சோதனையாளர்களை மீண்டும் ஈராக்குக்கு அனுப்புவது குறித்து நியூயோர்க்கில் ஐ.நா. அதிகாரிகளும் ஈராக் அதிகாரிகளும் நேற்றுப் பேச்சு நடத்தியுள்ளனர்.



கூட்டம் நடந்த இடத்துக்கு வெளியே கடும் பாதுகாப்பு

கடந்த நான்கு வருடங்களில் - 1998இல் ஈராக்கை விட்டு கண்காணிப்பாளர்கள் வெளியேறிய பின்னர் - ஈராக் அதிகாரிகளும் ஐ.நா. அதிகாரிகளும் சந்தித்துப் பேசிக்கொள்வது இதுவே முதற்றடவை.

நேற்றைய பேச்சுக்களின் போது ஆயுதக் கண்காணிபபாளர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகிறது. சந்தேகத்துக்குரிய இடங்களை - ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் மாளிகைகள் உட்பட - கண்காணிப்பாளர்கள் தடையின்றிச் சோதனையிடுவது குறித்தே மிக முக்கியமாக ஆராயப்பட்டது.

கூட்டத்தின் பின்னர் பேசிய ஐ.நா. கண்காணிப்பாளர் குழுவின் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ், ஐ.நா.கண்காணிப்பாளர்களுக்கு உதவுவதாக ஈராக் அளித்த வாக்குறுதி இப்போதுதான் உண்மையான சோதனைக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

சோதனையாளர்கள் கட்டுப்பாடின்றி தேவையான இடங்களை சோதனையிட அனுமதிக்கப்படுவதையே தாம் விருப்புவதாகவும் -

அனைத்து விடயங்களையும் முதலிலேயே பேசித் தீர்த்துவிடவேண்டும் என்றும் -

ஈராக் சென்ற பின்னர் அந்த நாட்டுடன் முரண்பட்டுக்கொள்வதைத் தாம் விரும்பவில்லை என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் இன்றும் நாளையும் தொடரும். பேச்சுக்கள் தொடர்பான இறுதி அறிக்கையை தலைவர் பிலிக்ஸ் எதிர் வரும் வியாழக்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் சமர்ப்பிப்பார்.

இதேவேளை - ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதை உள்ளடக்கிய புதிய - கடுமையான - பிரேரணை ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா தொடர்ந்து கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் முயற்சிகளுக்கு ஏற்கனவே பிரிட்டன் ஆதரவு தெரிவித்துள்ளது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஏனைய நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவற்றின் ஆதரவை நாடுவதற்கான முழு முயற்சிகளை பிரிட்டனும் அமெரிக்காவும் மேற்கொண்டுள்ளன. ஏற்கனவே எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றி பெறவில்லை. புதிய பிரேரணைக்கு ஆதரவளிக்க மற்றைய மூன்று நாடுகளும் இணங்க மறுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் -

ஈராக் மீது போர்தொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கொண்டு வருவதற்கு உலகெங்கும் கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது. பல நாடுகளின் முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்கள் திரண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். (ம)




ஈராக் மீது அமெரிக்கா மேற்கொள்ளக்கூடும் என்று கருதப்படும் இராணுவ நடவடிக்கைக்கு உலகெங்கும் இருந்து கடும் கண்டனம் எழுப்பப்பட்டு வருகிறது. ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இத்தகைய பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது. போர் வேண்டாம் என வலியுறுத்தி ஆயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர். இவ்வாறான பெரும் பேரணி சனிக்கிழமையன்று லண்டனில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷியாவில் நேற்று பொலீஸ்-இராணுவம் மோதல்

## நால்வர் பலி; 24பேர் காயம்

ஜகார்த்தா,ஒக்.1

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவின் மடான் நகரில் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு பொலீஸார் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை இந்த மோதல் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திடீரென பொலீஸ் நிலையம் ஒன்றைச் சுற்றி வளைத்து துப்பாக்கிகளால் சுட்டும், கிரனேட்டுக்களை வீசியும் தாக்கினர். பொலீஸார் நால்வர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 24 பேர் காயமடைந்தனர்.

இராணுவச் சிப்பாய் ஒருவர் போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலீஸ் அதிகாரியால் கைது செய்யப்பட்டார். இதனால் ஆத்திரம் அடைந்தே இராணுவத்தினர் பொலீஸார் மீது தாக்குதல் நடத்தினர் என்று பொலீஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பொலீஸ் நிலையத்தில், பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 61 பேர் தப்பிச்சென்றுவிட்டதாகவும் அவர் சொன்னார்.

இந்தோனேஷியாவில் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெறுவது இதுதான் முதற்றடவை என்றல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு நடைபெற்றுள்ளன.

இந்தோனேஷியாவில் இராணுவம் மிக வலிமைவாய்ந்த ஒரு - செல்வாக்குடைய - அமைப்பாக இருந்து வருகின்றது. ஆனால் அதன் மீது அடிக்கடி மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களும் ஒழுக்கமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும் வருவது வழமை.

1999இற்கு முன்னர் இந்தோனேஷியா கிழக்குத் திமோரை ஆக்கிரமித்திருந்தபோது அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்களை அவர்கள் கொன்று குவித்திருந்தனர். இதனால் அந்த நாட்டுக்கான ஆயுத விற்பனையையும் இராணுவ ஒத்துழைப்பையும் நீண்டகாலமாக அமெரிக்கா நிறுத்தி வைத்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## உலக வர்த்தக மையம் அருகே உள்ள மாடிக் கட்டடத்தை இடிப்பு

நியூயோர்க்,ஒக்.1

நியூயோர்க்கில் உலக வர்த்தக மையத்துக்கு அருகிலுள்ள இரண்டு அடுக்கு மாடிக் கட்டட வெளிச் சுவரில் விரிசல் ஏற்பட்டுள்ளதால் அந்தக் கட்டடத்தை இடித்துத்தள்ள நகர நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கட்டடத்திலுள்ள ஹோட்டல்கள், இதர கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன என்று நகர ஆணையர் பிராங்க் மெக்கர்டன் தெரிவித்துள்ளார்.

கிரீன்விச், ரெக்டர் தெருக்களின் முனையிலுள்ள இந்தக் கட்டடத்தில், 2001, செப்ரெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் உலக வர்த்தக மையத்தின்மீது நடத்திய தாக்குதலையடுத்து விரிசல் ஏற்பட்டது. (ம)

## சீன மொழியை தமிழில் கற்க புதிய நூல்

ஹொங்கொங்,ஒக்.1

தமிழ்மூலம் சீன மொழியை எளிதாகக் கற்றுக்கொள்ள உதவும் நூல் ஒன்று ஹொங்கொங்கில் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டது.

'சீன மொழி ஓர் அறிமுகம்' என்ற தலைப்பிலான இந்நூலை ஹொங்கொங்கிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி மதுசூதனன் ஸ்ரீதரன் தயாரித்துள்ளார். நூலை இந்தியத் தூதர் அசோக் கே.காந்த் வெளியிட்டார். இதற்கான நிகழ்ச்சிக்கு ஹொங்கொங் தமிழ்ப் பண்பாட்டு சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. (ம)

## தலையில் சாயம் பூசிய பெண் பொலீஸ்மீது ஒழுங்கு நடவடிக்கை

ஹொங்கொங்,ஒக்.30

ஹொங்கொங்கில் உள்ள பெண் பொலீஸ் அதிகாரி ஷரோன்லிம் ஷியோ - ஹ்வா. இவர் தனது தலை முடியில் 'டை' அடித்துக்கொண்டார்.

இதற்கு அவரது மேலதிகாரி எதிர்ப்புத் தெரிவித்து அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார்.

கடந்த ஆண்டு அறிமுகமான பொலீஸ் விதிமுறைப்படி, தலைக்குச் சாயம் பூசுவது தடைசெய்யப்பட்டுள்ளது. சாயம் பூசுவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து அது நியாயமற்றது என்று கூறி, அதை ரத்துச் செய்யும்படி கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து இருக்கின்றார் ஷரோன் லிம். (ம)

## விமானத்தை கடத்த முயன்றவருக்குப் பிணை!

சுவீடிஷ்,ஒக்.1

பிரிட்டிஷ் விமானம் ஒன்றைக் கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரிம் சடொக் சற்றி (வயது29) என்ற நபருக்கே பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் விமானம் ஒன்றில் ஏறச்சென்ற இவரது கைப்பையில் துப்பாக்கி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டார். இவர் விமானத்தைக் கடத்துவதற்குத் திட்டமிட்டார் என்று அதிகாரிகள் அவர் மீது குற்றஞ்சாட்டினர்.

சுவிஸ் நீதிமன்றில் இவருக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் ஒழுங்காக வந்து பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திடவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்துகொண்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். (ம)

## பிரிட்டிஷ் ராணியின் மகள்மீது வழக்கு

லண்டன்,ஒக்.1

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் மகள் ஆனியும் அவரது கணவர் டிம்லாரன்ஸும் வளர்த்த நாய், ஒருவரைக் கடித்துவிட்டது.

அவர் கொடுத்த புகாரைத் தொடர்ந்து இளவரசி மற்றும் அவர் கணவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. 52 வயதான ஆனி தன் கணவருடன் சேர்ந்து கிழக்கு பெர்க்ஷயர் மாஜிஸ்ரேட்டு கோட்டில் இன்னும் 10 நாள்களில் ஆஜராக இருக்கிறார்.

நாயை அஜாக்கிரதையாக விட்ட குற்றத்துக்காக 3 லட்சம் ரூபா அபராதமும் ஜெயில் தண்டனையும் விதிக்கப்படலாம். அத்தோடு நாய் வளர்க்கும் தகுதியையும் இளவரசி இழப்பார்.

## ஆப்கானில் பெண்கள் இரவில் பூங்காவுக்கு செல்வதற்குத் தடை

காபூல்,ஒக்.1

ஆப்கானிஸ்தானில் பெண்கள் இரவில் தனியாகப் பூங்காவுக்குச் செல்லக்கூடாது என்று ஹெராட் நகர ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

ஹெராட் நகரில் தலிபான்களின் ஆட்சி கவிழ்ந்த பின்னிருந்து அதனை ஆளுநர் இஸ்மாயில்கான நிர்வகித்து வருகிறார். தனக்கு ஆலோசனை கூற 60 பேர் கொண்ட அறிஞர்கள், மததலைவர்கள் குழுவையும் அவர் வைத்திருக்கிறார்.

இந்தக் குழு அண்மையில் மசூதியில் கூடி பெண்களுக்கான விதிமுறைகளை வகுத்தது. பெண்கள் இரவில் பூங்காவுக்குச் செல்லக்கூடாது. பொது இடங்களில் பெண்கள் வண்ணத் துணிகளை அணியக்கூடாது. வேலை செய்யும் பெண்கள் பெண்களுக்கான தனி அலுவலகங்களில் மட்டுமே பணியாற்ற வேண்டும். வேலைதொடர்பான கூட்டங்களையும் பெண்கள் தனியாக நடத்த வேண்டும் - என்று அந்தக் குழு விதிகளை வகுத்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். (ம)

## ஏழைநாடுகளுக்கு ஐ.எம்.எப்.உதவி

வாஷிங்ரன்,ஒக்.1

கடன்சுமையால் திணறும் ஏழை நாடுகளுக்கு மேலும் உதவியளிக்க சர்வதேச நாணய நிதியம் முடிவு செய்துள்ளது.

இத்தகவலை நிருபர்களிடம் நிதியத்தின் கொள்கை உருவாக்கப் பிரிவின் தலைவரும் பிரிட்டிஷ் அமைச்சருமான கார்டன் பிரவுன் தெரிவித்தார்.

இந்த உதவியின் அளவு எவ்வளவு என்றோ எப்போது கிடைக்கும் என்றோ அவர் தெரிவிக்கவில்லை.

கடன் சுமையால் சிக்கியுள்ள ஏழை நாடுகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்துக்கென நிதி உதவியளிக்க 15 நாடுகள் உறுதியளித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இத்திட்டத்துக்கு 100 கோடி டொலர் தேவைப்படுகிறது. உலக வங்கி, நாணயநிதியம் ஆகிவற்றின் முயற்சியில் ஏழைநாடுகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம் 1996இல் கொண்டுவரப்பட்டது. (ம)

## யஸீர் அரபாத் வெளியே வந்தார்

ஜெருசலேம்,ஒக்.1

பலஸ்தீனத் தலைமையகம்மீது 10 நாள்களாக மேற்கொண்டுவந்த கடும் முற்றுகையை இஸ்ரேல் விலக்கிக்கொண்டதையடுத்து யஸீர் அரபாத் தனது தலைமையகக் கட்டடத்தில் இருந்து வெளியேறினார்.

இஸ்ரேலின் முடிவு ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தால் ஏற்பட்ட ஒன்றல்ல. இஸ்ரேல் உலக நாடுகளின் அபிப்பிராயத்துடன் மோதிப் பார்க்கின்றது - என்று தனது கட்டடத்தில் இருந்து வெளியே வந்த அரபாத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தலைமையக அலுவலகத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறியபோதும் அங்கிருந்து சற்றுத் தூரத்தில் அவை நிலைகொண்டிருக்கும் என்றும் -

தேடப்படும் தீவிரவாதிகளை பலஸ்தீனம் ஒப்படைக்காதவரை ரமழாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறாது என்றும் -

இஸ்ரேலியப் பிரதமரின் பேச்சாளர் தெரிவித்தார். (ம)

## ஐவரிகோஸ்ட்டுக்கு உதவிப் படைகள் அனுப்புவதற்கு முடிவு

லண்டன்,ஒக்.1

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்டில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் தொடரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் கிளர்ச்சி அடக்கும் படையணி ஒன்றை அங்கு அனுப்ப மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இரு தரப்பினிடையேயும் அவசரமாக சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று மேற்கு ஆபிரிக்க நாடுகள் 15 இன் பொருளாதாரக் குழு தீர்மானித்துள்ளதாக செனகல் நாட்டின் அதிபர் அப்துல்லா வேட் தெரிவித்தார்.

அவசரமாகக் கூடிய மேற்படி குழுவின் கூட்டத்தின் பின்னர் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். 4 ஆயிரம் அமைதிப் படையினரை அனுப்புவது குறித்து சிந்திப்பதாகவும் அவர் சொன்னார். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் Spoken English. ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதி. 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (8858)

## நாடகம்

ஆசிரியர் தினத்தில் நடிப்பதற்குப் பொருத்தமான 'பரிசு' நாடகமுள்ள நூல் 'இலக்கியக்கட்டுரைகள்' நாடகத்தில் நடிப்பது எப்படி? என்ற விளக்கமும் தந்திருக்கின்றார். 350நாடகங்கள் எழுதிய அராலியூர் நசுந்தரம்பிள்ளை.(8898)

## கோழித்தீன விற்பனை

Original Prima கோழித்தீன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொகையாகக் கொள்வனவு செய்வோருக்குக் கழிவுண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8838)

## கூரைத்தகடுகள் விநியோகம்

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள கணவனை இழந்த விதவைக் குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுவருகின்றன. வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை கிராம சேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கு ஏற்கனவே இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-182)

## ஸ்கிறீன் பிறிண்டிங் வகுப்புகள்

பிரிவு II

இன்று முதல் ஆரம்பம்

01.10.2002 (10.00a.m.)

அடிப்படைக் கணனிப் பயிற்சி வழங்கப்படும்.

ஓடர்கள் செய்துகொடுக்கப்படும்.

**S.நிஷாந்தன்**

18/5, மார்ட்டின் றோட்,

யாழ்ப்பாணம்.

*T.P.No.: 077 - 154938.* (8877)

## விற்பனைக்கு

204-என்ற தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.குணராஜா, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை. T.P.:3521. (8878)

10 பரப்பு தோட்ட நிலம், தனிக் கிணறு உட்பட புதிய வீடு, நீர்வேலி மேற்கு, இராச வீதி, 4ஆம் கட்டைக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சனிக்கிழமைகளில் க.மகேஸ்வரன், இல.33, பண்டாரக் குளம் வீதி, நல்லூர். (8882)

இங்கிலாந்து LISTRA எஞ்சின் 2 சிலிண்டர் 10KV ஏயர் கூலர் Standard Briston Single Pace நல்ல நிலையிலுள்ளது விற்பனைக்கு உண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: S.K.நல்லதம்பி, விபேட்டி சினிமா ஒழுங்கை, அச்சுவேலி. தொலைபேசி: 070-212223. (8835)

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில் ஓட்டுமடம் வீதி, ஓடை ஒழுங்கையில் சுற்றுமதிலுக்கான அத்திவாரத்துடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை. தொடர்பு: காலை 6-8 மணி, மாலை 6-8 மணி. 28/1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (8797)

பல இனங்களில் குருவிகள், பல வர்ணங்களில் மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (8786)

## வீடு விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் மிக அண்மையாக சோடாக் கொம்பனி ஒழுங்கையில் 5 1/2 பரப்புக் காணியில் ஆறு அறைகளும் தனிக்கிணறும் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.சிவநேசன், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (காலை 8.30 மணிக்கு முன்னரும் மாலை 5.00 மணிக்குப் பின்பும்). (8832)

## தவறிவிட்டது

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அ.தயாபரன் என்பவருடைய தே.அ.அ.(இல.733402059V) வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.தயாபரன், தெல்லுலுவை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (8870)

28.09.2002 அன்று ஒரு தொகை மோட்டோர்கள் பிரதான வீதிக்கும் மார்டீன் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 121, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.(8879)

நவரட்ணம் அன்னலட்சுமி என்பவரின் தே.அ.அட்டையும், வி.அ.அட்டையும் உரும்பிராய் காளிகோயிலுக்கும் கோண்டாவில் டிப்போவுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. அடையாள அட்டை இல.408510660V. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். 50/18, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (8883)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயம் றஞ்சித்காந்த் என்பவருடைய தே.அ.அ (731711283V), வி.அ.அ., பல்கலைக் கழக அ.அ.என்பன யாழ்.நகரிற்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: 118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.No.: 222-3427. (8894)

13A, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிடப்பட்ட கிறிஸ்டியன் சிலுவைதாஸன் என்பவரது தே.அ.அ.(இல. 482953310V) மற்றும் வாகனஅனுமதிப் பத்திரம் என்பன குருநகருக்கும் பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (8905)

பாடசாலை வீதி, தாவடி தெற்கைச் சேர்ந்த கமலம் சிவசுப்பிரமணியம் என்பவருடைய தே.அ.அ. (இல. 517254088V), விசேட அ.அ.(இல. 0906007974), கமலாவதி சிவசுப்பிரமணியம் என்பவருடைய வி.அ.அ. (இல.0906007956) என்பன 20.09.2002 அன்று வல்லிபுரக்கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (8900)

---

உ

## யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயில் மண்டலாபிஷேக பூர்த்தியும் நவோத்ர சகஸ்ர (1008) சங்காபிஷேகமும்



02-10-2002 புதன்கிழமை

இன்று (01-10-2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகின்றன. நாளை (02-10-2002) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகும்.

மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் திருப் பூந்தண்டிகையில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

அடியவர்கள் யாவரும் வருகைதந்து எம் பெருமான் அருளைப் பெற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் பணியில் நிற்கும்:
**ஆலய நிர்வாகம்.**

(8901)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஆண்டவன் படைப்பு 02 - 10 - 1936



ஆண்டவன் அழைப்பு 01 - 09 - 2002

### அமரர் குருசாமி ஜெகநாதன் (ஜெயம்)

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளர்)

அன்னார் சிவபதமடைந்த செய்திகேட்டு தொலைபேசிமூலமும், தந்திமூலமும், நேரடியாகவும் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவியவர்களுக்கும் மற்றும் பல உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது இதயங்கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமது இல்லத்தில் இன்று (01.10.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக் கிரியை நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்.**

*ரங்கூன் வீதி,*
*புலோலி மேற்கு, பருத்தித்துறை.*

(8872)

---


# சுடர் ஒளி

விலை 14/-

## 01.10.2002 இதழில்

- புலிகளுடன் நிழல் யுத்தத்துக்கு தயாராகிவிட்டாரா சங்கரியார்?
- குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைகிறதா?
  *- வடபுலத்தில்*
- கைதிகள் பரிமாற்ற நிகழ்வு வரலாற்றில் முக்கிய பதிவு
- செல்வாவின் மறைவுக்குப் பின்னர் தமிழர் தலைமையை ஏற்ற அமிர
  *- வரலாற்றுக் கட்டுரை*
- வெற்றிப் படிகளுக்கு வித்திட்ட திலீபன்
- சமாதான கர்த்தாக்களை ஓரங்கட்ட புதிய முயற்சி
  *- தேரடி*
- அலைகளின் காவியம்:
  சூரியக் கதிர் நடவடிக்கை 3இல்
  தென்மராட்சி அரச படைகளிடம் வீழ்ச்சி
- துலங்காத மர்மம் *- க்ரைம் டயரி*
- சித்திரத் தொடர்கதை
- வெளிநாடு போக வேண்டாம். *- நகைச்சுவை விருந்து*

மற்றும் கண்ணீரில் கரையும் இரவுகள் - சிறுகதை, மசாலா மிக்ஸ், இணையத் தளங்களிலிருந்து, சினிமா, விளையாட்டு, சிறுவர் பகுதி, கவிதைப் புனல் மற்றும் விசேட அம்சங்கள்.




(C-24021)

உதயன்

## மகா சங்கத்தினரின் மனமாற்றம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற முதற்சுற்றுப் பேச்சு இருதரப்புக்குமிடையே புரிந்துணர்வையும், நெருக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

நிரந்தர யுத்தநிறுத்தம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமாதானம் ஆகியவற்றுக்கான அடித்தளத்தையும் அந்த முதற்சுற்றுப் பேச்சு அமைத்திருக்கிறது.

அந்தப் பேச்சின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியரும், புலிகள் குழுவுக்குத் தலைமை தாங்கியவருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் புலிகளின் நிலைப்பாடு குறித்து வழங்கிய விளக்கமும், தெரிவித்த அரசியற்கருத்துக்களும் தமிழ்மக்கள் மீது பெரும்பான்மையினரான சிங்களமக்கள் கொண்டிருந்த சந்தேகத்தை நீக்கிவிட்டன. தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்; அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று ஆர்வங்கொள்ளச் செய்துவிட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக பௌத்த பீடாதிபதிகளையும், மகா சங்கத்தினரில் பெரும் பகுதியினரையும் தாய்லாந்துப் பேச்சு மனம்மாற வைத்துவிட்டது.

புலிகளோடு அரசு பேசக்கூடாது. அவர்களோடு தொடர்ந்து போர் செய்து அவர்களைக் கொல்லவேண்டும் அல்லது அவர்களின் முதுகை முறித்து மீண்டும் அவர்களைத் தலைதூக்க முடியாமல் செய்யவேண்டும் என்று நீண்டகாலமாகப் பௌத்த பீடாதிபதிகளும் மற்றும் பிக்குகளில் பெரும்பகுதியினரும் வற்புறுத்தி வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்று முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்குச் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொண்டதை அடுத்து புலிகளுடன், அரசு பேசிப் பார்ப்பதில் தவறில்லை என்ற நிலைக்கு அவர்கள் வந்தனர்.

முதற்சுற்றுப் பேச்சு வெற்றி அளித்தது குறித்து அவர்கள் திருப்தியும், மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர்.

சிறுபான்மை மக்கள் விடயங்களில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் காட்டத் தொடங்கியுள்ளனர்.

மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தை எதிர்த்து தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பல பௌத்த பிக்குமார் சகிதம் கண்டி மல்வத்தை பீடாதிபதி ரம்புக்வெல்லே ஸ்ரீதர்மரசித்த தேரர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்த நீர்மின் திட்டத்தால் மலையகத்து சூழல் பாதிப்படையும்; தலவாக்கலை நகரமே நீரில் மூழ்கிவிடும்; மண் சரிவு நிகழ்வுகள் ஏற்படும்; எல்லாவற்றிற்கும் மேலாக அங்கே பெரும் எண்ணிக்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரும் பாதிப்புகளுக்கு இலக்காவார்கள் என்று ஆறுமுகம் தொண்டமான் எதிர்ப்புக் குரல் எழுப்பிவருகிறார்.

ஆறுமுகம் தொண்டமானின் அதே கருத்தை மகா நாயக்கர் தாமும் கூறி அரசு இந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று வற்புறுத்தினார்.

மகா நாயக்கரோடு மற்றும் சில பிக்குமாரும் மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தை தமிழ் மக்களோடு சேர்ந்து தாமும் எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தனர்.

மகா சங்கத்தினரே இன்று தமிழ்மக்களின் நலனில் அக்கறைகொண்டு அவர்களுக்காகக் குரல்கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் என்றால் நிலைமை எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது; முன்னேறியிருக்கிறது!

இந்த நிலைமை தொடருமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதும், இந்த நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக நிலைபெறச் செய்வதும் சுலபமாகிவிடும்.

இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழர் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் நன்றி தெரிவிக்கவேண்டும்.

# மலையகத் தமிழர்கள் விடயத்தில் தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதிப்பு!

## வேதனைக்குரியது என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு,ஒக்.1

தாய்லாந்தில் அரசு - புலிகள் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ள நிலையில் மலையகத் தமிழர்களின் அபிலாஷைகளும் அந்தப் பேச்சில் ஆராயப்பட வேண்டும் என்ற எமது நியாயமான கோரிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவு தெரிவிக்காது மௌனமாக இருப்பது வேதனைக்குரியது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் ஆரம்பம் முதல் ஆதரித்துள்ளார்கள். கடந்த ஆட்சியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று முத்திரை குத்திவிட அன்றைய அரசும், சில சர்வதேச சக்திகளும் முனைந்து நின்றபோது விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர், அவர்கள் விடுதலைப் போராளிகள் என வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து இந்திய வம்சாவளி மலையகக் கட்சிகளும் வலியுறுத்தின.

போர்நிறுத்தத்தை வேண்டியும், புலித்தடையை நீக்கக் கோரியும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் உரக்கக் குரல் கொடுத்தனர். இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணியில் இன்று நடைபெறும் பேச்சுக்களில் சிங்கள, வடக்கு - கிழக்குத்தமிழர், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசப்படும்போது இந்திய வம்சாவளித் தமிழர்களின் அபிலாஷைகளும் ஆராயப்பட வேண்டும் என்ற எமது நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் முழுமையாக இதுவரையில் முன்வராதது வேதனைக்குரியது.

தாய்லாந்தில் அரசுக்கும் , புலிகளுக்கும் இடையில் பேச்சு ஆரம்பமாகிவிட்டது. இப் பேச்சின் பிரதான தரப்புகள் அரசும், தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காக இரத்தம் சிந்திப் போராடிய விடுதலைப் புலிகளுமே. இந்த அந்தஸ்து வேறு எவருக்கும் கிடையாது. தற்போது போரினால் வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை மாற்றி இயல்பு நிலையை ஏற்படுத்துவது சம்பந்தமாக பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இதை நாம் முழு மனதுடன் வரவேற்கின்றோம்.

பின்னாளில் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுக்கள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் மக்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும். இதையும் நாம் வரவேற்கின்றோம். அதேவேளையில், முஸ்லிம் மக்களுக்கு இணையான சம அந்தஸ்து இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கும் வழங்கப்படவேண்டும். இந்த எமது கோரிக்கையை ஆதரிப்பது தமிழ்க் கட்சிகளின் வரலாற்றுக்கடமை.

கடந்த ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அன்றைய அரசின் பயங்கரவாதத்திற்கும், திட்டமிட்ட பிரசாரத்திற்கும் எதிராக, துணிச்சலாகச் செயற்பட்டது. புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரத்திற்கும் பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பாடுபட்டது. இக்கூட்டமைப்பில் முழுமையாகப் பங்கெடுத்த தென்னிலங்கைத் தமிழர் அமைப்பு நமது கட்சி என்பதை இன்றைய தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கட்சித் தலைவர்கள் அறிவார்கள்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகள் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவரும் புதிய அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்ற கருத்தை எமது கட்சி எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்நோக்கில், வடக்கு - கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம், சிங்கள சிறுபான்மையினருக்கென அரசியல் சாசன ரீதியாக மேற்கொள்ளப்படும் சகல விசேட ஏற்பாடுகளும், மலையகம் உட்பட இலங்கையின் மிகுதிப் பகுதிகளில் வாழும் தமிழ பேசும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை அன்றைய தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பிற்கு எமது கட்சி சமர்ப்பித்திருந்தது. இப்பிரேரணையை பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

வடக்கு - கிழக்கு சிங்கள, முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்படும் அந்தஸ்து வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாடு புதிய ஒரு கோரிக்கையல்ல. எனவே, தாய்லாந்து பேச்சு ஆரம்பமாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் புதிய கோரிக்கைகள் முன்வைக்கப்படக் கூடாது என்ற நோக்கத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்களை புறக்கணிப்பது முறையல்ல.

ஆரம்பக்கட்ட பேச்சின்போது மலையகத் தமிழர் பற்றி பேசுவதற்கான அவசியம் இல்லை. எனவே, உடனடியாக இந்திய வம்சாவளி பிரதிநிதிகள் தாய்லாந்து செல்லவேண்டிய காரணமும் இல்லை. ஆனால், தேசிய இனப்பிரச்சினை முழுமையாக ஆராயப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது இந்திய வம்சாவளித் தமிழர்களின் அபிலாஷைகளை மலையகத் தமிழர் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டும். இது முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவ அந்தஸ்துக்கு சமானமானதாகும். எமது இந்த நிலைப்பாட்டின் நியாயத்தை தமிழ்க் கட்சிகளும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டு ஆதரிக்கவேண்டும் - என்றுள்ளது.

(ம)

# நூலகப் பாவனை பற்றி மாணவருக்கு விளக்கமளிப்பது ஆசிரியர்கள் கடமை

## நூலகவாரத்தில் உரை

செம்பியன்பற்று,ஒக்.1

நூலகங்களைப் பயன்படுத்துமாறு மாணவர்களை ஆசிரியர்களே ஊக்குவிக்கவேண்டும்.

சகல பாடசாலைகளிலும் நூலகங்களின் முக்கியத்துவம் காலத்துக்குக் காலம் வலியுறுத்தப்பட்டுவந்திருக்கின்றபோதிலும், அண்மையில்தான் அரசு பாடசாலை நூலக அபிவிருத்தியில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் நூலக வார நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் எஸ்என் திருச்செல்வம் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில் உலக வங்கியின் உதவியுடன் நூலகங்கள் அமைக்கப்பட்டதும் -

பின்னர் அவை கல்வி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதும் - தெரிந்ததே.

ஏனைய பாடசாலைகளிலும் நூலக வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மாணவர்களின் அறிவுத் தேடலுக்கும் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுக்கும் பாடசாலை நூலகங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த சாதனங்களாகத் திகழ்வதனாலேயே அரசு புதிய கல்வித் திட்டத்தில் பாடசாலை நூலக அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. மாணவர்கள் பாடசாலை நூலகங்களோடு பொது நூலகங்களையும் பயன்படுத்தவேண்டும் - என்றார்.

(எ-ரி)

### நாளை

புரட்டாதி 16
புதன்கிழமை
(02.10.2002)
திதி : ஏகாதசி
பின்னிரவு 2.18 வரை.
நட்சத்திரம்: பூசம்
காலை 8.06 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 4.31 - 6.02
ராகுகாலம்: 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

எந்த நிகழ்ச்சியையும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோமோ, அதன்படி நல்லதோ கெட்டதோ ஆகிறது.

### யாழ்.மாநகரசபைப் பிரிவில்

# வீதி புனரமைப்புக்கு 20 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் வேலைகளுக்கென புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு 20 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியின்மூலம் பின்வரும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

★ அரியாலை, கனகரட்ணம் வீதியின் ஒரு பகுதி புனரமைப்பு (10 லட்சம் ரூபா)

★ கச்சேரி கிழக்கு லேன் புனரமைப்பு ( 5லட்சம் ரூபா).

★ நாவலர் வீதியின் ஒரு பகுதி புனரமைப்பு (2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா)

★ குருநகர், அடப்பன் வீதி புனரமைப்பு (75 ஆயிரம் ரூபா).

★ குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய கிழக்கு ஒழுங்கை புனரமைப்பு (78 ஆயிரம் ரூபா).

★ பாஷையூர் முதலாம் குறுக்குத்தெரு புனரமைப்பு (97 ஆயிரம் ரூபா).

(எ-10)


## ஒக்ரோபர் - 01
## சர்வதேச சிறுவர் தினம்



இன்று(01.10.2002) செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தில் அனைத்து சிறுவர்களும் தமது உரிமைகளைப்பெற்று சுபீட்சத்துடன் வாழ எமது நல்வாழ்த்துக்கள்!

- மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு.

மக்கள் தொடர்புகளுக்கான சுகநல சேவை,
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 2222261.

(C/24024)

காலபோகத்தைமுன்னிட்டு

# வலி.மேற்கு, தென்மேற்கில் நெல்நாற்று மேடைகள்

சண்டிலிப்பாய்,ஒக்.1

வலி.தென்மேற்கு, வலி.மேற்கு ஆகிய பகுதிகளில் விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் நாற்று நடுவதற்காக நெல்நாற்று மேடைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த மாதத்தில் மழை வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் நெல் நாற்றுகள் நடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

ஆறுமாத, ஐந்தரை மாத கால விளைச்சலையுடைய பாரம்பரிய நெல் இனங்களை விதைக்கும் விவசாயிகளில் பலர் தற்போது நெல் விதைப்பில் ஈடுபட்டுவருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டபடி மழை உரிய காலத்தில் பெய்யத்தவறியதை அடுத்து, பலர் தங்கள் கிணறுகளிலிருந்து நீர் இறைத்து, உழுது பண்படுத்தி நெல் விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கிணறு வசதியற்ற நிலையிலுள்ள விவசாயிகள் புழுதி உழவு மேற்கொண்டும் நெல் விதைத்தும் வருகின்றனர்.

மழை விரைவில் பெய்யும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு புழுதி விதைப்பை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-135)

## நெஞ்சைவிட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18 - 06 - 1939

மறைவு 12 - 10 - 2001

அமரர்

### வேலாயுதம் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர்)

திதி: 01.10.2002 அபரபக்க தசமி

அன்பால் எம்மைக்காத்து
ஆசையாய் எமைவளர்த்து
பூவுலகில் சிறக்க வைத்த எந்தையே!
சீராக நாம் வாழும் காலமதில்
எம் சிறப்பைக் காணாது சென்றனையோ?
"அப்பா" என்று நாம் ஆயிரம் தரம் அழைத்தாலும்
உம்மைக்காணாது தவிக்கின்றோம்.

இந்நிலையில் முதலாவது ஆண்டில் நாம் உங்களை நினைவு கூருகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தற்காலிக முகவரி:*
*பண்டிதர் மாணிக்கத்தியாகராஜா வீதி.*
*சுன்னாகம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

(8815)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பூவுலகில் 11 - 03 - 1939

வானுலகில் 17 - 09 - 2002

திருமதி

### கந்தசாமி புஸ்பராணி

அன்பும் பண்பும் நிறைந்த அணையாத அகல்விளக்கே!
உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்!

அமரரின் அவஸ்தை நிலையிலும், அவ்வொளிவிளக்கு அணைந்தவேளையிலும், உடன்நின்று விண்ணக வழியனுப்பும்வரை பல வழிகளிலும் எமக்கு உதவிபுரிந்த அன்பு இதயங்களுக்கும்,

தம் அனுதாப உணர்வுகளைச் சொல்லிலும், செயலிலும், மலர்வளையம் சாத்தியும் துயர் தெரிவித்த அன்பு நண்பர்கள், உறவினர் அனைவருக்கும், 22. 09. 2002 நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்து எமக்கு ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு இதயங்களுக்கும்,

எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (02. 10. 2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அன்றைய மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*12/25, கன்னாதிட்டி லேன்,*
*யாழ்ப்பாணம்.*
077-895714
01-436683 (8793)

அன்புடன்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தீர்த்தக்கேணி புனரமைப்பு

சுழிபுரம்,ஒக்.1

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயக்கேணி பலலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

கேணியைச் சுற்றிவர மதில் அடைக்கப்பட்டு கேணியில் தாமரை வளர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-28)

## நல்லை ஆதீனத்தில் வயலின் சோலோ

யாழ்ப்பாணம்,ஒக்.1

சிறுவர்தினம், முதியோர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று மாலை 6.00 மணிமுதல் வயலின் சோலோ இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வயலின் இசையை 'இசை ஞான திலகம்', 'சிவகலாபூஷணம்' உ.இராதாகிருஸ்ணனும், செல்வி சையிந்தவி இராதாகிருஸ்ணனும் வழங்குவர். (எ-8)


## சாரதிகளுக்கு சேமலாப நிதி

கொழும்பு,ஒக்.1

தனியார் பஸ் சேவைகளில் கடமையாற்றும் சாரதிகள், நடத்துநர்களை ஊழியர் சேமலாப நிதியத்தில் சேர்ப்பதற்கு தனியார் பஸ்உரிமையாளர்கள் வற்புறுத்தப்படுவார்கள் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள சங்கம் தெரிவித்திருக்கின்றது.

சங்கத்தின தலைவர் ஜெமுனு விஜயரட்ண தகவல் தருகையில், சாரதிகளையும் நடத்துநர்களையும், ஊழியர் சேமலாபநிதியத்தில் சேர்ப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர்களில் அரைப்பங்கினர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்கள். இருந்தபோதிலும் சாரதிகளும் நடத்துநர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தில் சேர்ந்துகொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை அவர்களுக்கு வழங்குவது சம்பந்தமாக தொழில் திணைக்கள ஆணையாளருடன் உடன்பாடு காணப்பட்டிருக்கிறது - என்றார். (ஐ-9)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்மகிழ 08 - 01 - 1935

கண்நெகிழ 11 - 10 - 2001

### அமரர் செல்லையா தம்பிராசா

*திதி: புரட்டாதி அபரபக்கதசமி*

(01-10-2002)

காலத்தால் அழியாத காவிய நாயகரே!
ஞாலத்தில் நிகர்இல்லாத பெயர் பெற்றவரே!
பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
கொடையில் வள்ளலாய் பார்ப்போருக்கு உத்தமனாய்
வாழ்ந்த எம் தெய்வமே! உங்கள் நினைவுகளை
உயிர் உள்ளவரை நினைத்து இருப்போம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

(8739)

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுநாளாகிய இன்று (01. 10. 2002) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தி.சரவணபவன் (மருமகன்)
இலகலடி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

பாசமிகு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

(8815)


# Canadian College of Business & Computers




**Scholarships will be awarded as follows:**

10 Awards of Partial Tuition CDN $ 17,000 each
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each

Scholarship application forms are available at:
24, Temple Lane,
Colombo 3,
Sri Lanka.
Tel: 507176

The deadline for receipt of completed applications is October 10th, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address from 5th to 10th October 2002 "

Scholarship Application & Admission
Canadian College of Business & Computers
Room 2G-02
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Copy of your Passport
3. Copy of your Birth Certificate
4. Copy of your Educational Certificates/Transcripts
5. Employment Letter (if any)
6. Proof of sufficient funds for living expenses for two years – (US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000, depending on the scholarship award you would receive
7. Fee of US $ 13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

**Aptitude Test**
Date: October 12th and 13th
Time: 10:00 am to 4:00 pm

**Interview**
Date: October 14th
Time: 10:00 am to 4:00 pm

**Location**
Bandaranaike Memorial
International Conference Centre
Bauddhaloka Mawatha, Colombo 07,
Sri Lanka.

**Ready for the challenge? Welcome to Canada for your studies.**

Contact Person: Meena Thyagarajan
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: meena@ccbc.ca

estudies "Education is the foundation of Human Development, Security and PEACE" WWW.CCBC.CA

e-Options

# சிறுவர் உரிமைகள் பேண இன்றே உறுதிகொள்வோம்!

இன்று உலக சிறுவர்தினம். பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்கள் என்று ஐ.நா.வலியுறுத்துகின்றது. அவர்களின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்றும், மதிக்கப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்துகின்றது. இன்றைய சிறுவர் தினத்தையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

*"பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை மக்கட் பேறு அல்ல பிற"*

என்ற வள்ளுவரின் பொய்யா மொழியானது, ஒருவன் பெறுகின்ற பேறுகளிலே மிகவும் சிறப்பானது நன்மக்கட்பேறே என்பதனை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. பிள்ளைகள் இவ்வுலகிலே நனிசிறந்து வாழ்வதற்கு ஒவ்வொருவரினதும் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாக உலகிலே உருவர்கப் போகின்றனர். எனவே, நாளைய தலைவர்கள் தற்போது எங்கள் கைகளிலே தவழ்வதனால் சிறப்பான உலகினை எதிர்காலத்திலே கட்டியெழுப்புவதற்கு நாம் இன்றே தயாராதல் அவசியமானது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயமானது சிறுவர்கள் எனப்படுவோரை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது. அதாவது, பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்கள் என அது கூறுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை இலங்கை அரசு 1991 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தியது. சிறுவர் உரிமைகள் சமவாயமானது 54 உறுப்புரைகள் கொண்டமைந்தது. சமவாய உறுப்புரைகளைச் செயற்படுத்துவதில் அரசு மிகவும் கவனம் எடுத்து வருகிறது. சிறுவர் உரிமைகளை அறிந்து செயற்படுவது எல்லோரினதும் முக்கிய கடமையாகும்.

### சிறுவர் உரிமைகள்

"பிள்ளைகளின் வளர்ச்சியில், நலனில் குடும்பம் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கிறது. பிள்ளைகளை பாதுகாப்பாக வளர்ப்பதும், உரிய வசதிகளைச் செய்துதருவதும் குடும்பத்தின் கடமை. சிறுவர்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் செவிமடுக்காது முடிவுகள் எடுப்பது தவறாகும். வீட்டில் மட்டுமன்றி பாடசாலையிலும் அல்லது வேறு இடங்களிலும் சிறுவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை கலந்துரையாடி முடிவெடுக்கும்போது அவர்களின் அபிப்பிராயங்களை மதித்து ஒழுகுதல் ஒவ்வொரு மனிதரதும் கடமை. பாடசாலையில் படிக்கும் உரிமையும், விரும்பிய பாடங்களைத் தெரிவுசெய்யும் உரிமையும் எல்லாப் பிள்ளைகளுக்கும் உரியன. சிறுவர்கள் தமது திறமைகளை வளர்ப்பதற்கு போதிய வசதிகளையும், சிறந்த உற்சாகத்தையும் வழங்குவது பாடசாலைகளின் கடமைகளாகும்.

"தாய், தந்தை ஒருமித்து வாழாவிடத்தும் தாய், தந்தையுடன் வாழும் உரிமை ஒவ்வொரு சிறுவருக்கும் உரியது. பிள்ளைகளை, அவர்களது உரிமைகளை மதித்து நடக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்த ஒவ்வொரு அரசும் தன்னால் இயன்றளவு செய்தல் அவசியம். சிறுவர் சமவாயத்திற்கு அளிக்கப்படவேண்டிய மதிப்பை எய்துவதற்கு, ஏனைய நாடுகளுக்கும் உதவி செய்தல் வேண்டும். குறித்த பெயரைக் கொண்டிருக்கும் உரிமையும், குறித்தவொரு நாட்டை, இனத்தைச் சேர்ந்திருக்கும் உரிமையும் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உரியது. ஒவ்வொரு சிறுவருக்கும் சமமான மனிதப்பெறுமானம் உண்டு. சிறுவர்களை தோற்றம், இனம், மதம், மொழி, பால் போன்ற பாகுபாடுகளுக்கு உட்படுத்தக்கூடாது. சிறுவர்கள் சுகவீனமுற்றிருக்கும்போது தேவையான மருந்து உதவிகளையும், பராமரிப்பு வசதிகளையும் பெறும் உரிமை ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உரியது" - என ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் சமவாய உறுப்புரிமை கூறுகிறது.

சிறந்தவொரு வாழ்க்கையை நடத்தும் உரிமை ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உரியது. ஏதாவது இயலாமை (குறைபாடு) இருப்பின் மேலதிக ஆதரவையும், உதவிகளையும் சிறுவர்கள் பெறமுடியும். தனது தாய் நாட்டைவிட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படும்போது ஒவ்வொரு சிறுவரும் தான் சென்றடைந்த ஒரு நாட்டிலே அந்நாட்டுப்பிள்ளைகள் கொண்ட



உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்கமுடியும் எவரின் துணையும் இல்லாது வேறு நாட்டில் வசிக்கும்போது விசேட பாதுகாப்பையும், உதவிகளையும் அவர்கள் பெறமுடியும். சாத்தியப்பட்டால் அந்நாட்டு அரசின் ஊடாகவோ அல்லது சிறுவர் உரிமைகளை வலியுறுத்தும் நிறுவனங்கள் ஊடாகவோ நாடு மாறிய சிறுவர்கள் மீண்டும் குடும்பத்துடன் சேர்த்து வைக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு பிள்ளைகளினதும் சிந்தனைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் நாம் மதிப்பளிப்பது அவசியமானது. உதாரணமாக, ஒரு சிறுவன் குறித்தவொரு நாட்டிலே சிறுபான்மைச் சமூகம் ஒன்றினைச் சேர்ந்தவனாக இருந்தால், அச்சிறுவன் தனது சொந்தப் பெயர், சொந்தமொழி, தனது சமூகப் பண்பாடு, சொந்த சமயம் போன்றவற்றை மற்றையோர் இடையூறின்றி அனுபவிப்பதற்கு முழு உரித்துமுடையவன் என்று சிறுவர் சமவாயம் கூறுகிறது. தான் விரும்பிய சூழலில் வாழ்வதற்கும், விளையாடுவதற்கும், தனது கடமைகளைச் செய்வதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.

தொலைத்தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், புத்தகங்கள் போன்றவற்றின் ஊடாகத் தமக்கு விரும்பிய தகவல்களைப் பெறவும், உள்நாட்டு, வெளிநாட்டுத் தகவல்களைப் பெறுவதற்கும், ஒவ்வொரு சிறுவர்களுக்கும் உரிமை உண்டு. அவ்வாறுதான பெற்ற தகவல்களைத் தனது நண்பர்கள் முதலான ஏனையோருக்குத் தெரியப்படுத்தவும், அத்தகவல்கள் பற்றிக் கலந்துரையாடி விமர்சிக்கவும் அவர்களால் முடியும்.

சிறுவர் சமவாய உரிமைகள் பற்றி அறிந்துகொண்டு அறிவைப் பெறுவது சிறுவர்களின் உரிமை ஆகும். ஏனையோரின் இடையூறுகள் இல்லாமல் தனித்து இருக்கும் உரிமையும் சிறுவர்களுக்குரியது. எந்தவொரு சிறுவர்களையும் கொடுமைப்படுத்தக் கூடாது; சுரண்டல் செய்யக் கூடாது; அவர்களின் கருத்தை அலட்சியம் செய்தல் கூடாது; எச்சிறுவர்களையும் கட்டாயப்படுத்தி வேலைகள் செய்வித்தல் கூடாது; அவ்வாறு சிறுவர்கள்மீது துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் அக்கொடியவர்களிடம் இருந்து தப்பி தனக்குரிய பாதுகாப்பையும், வசதிகளையும் பெறும் உரிமையும் சிறுவர்களுக்கு உண்டு.

சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும். தொழிற்சாலைகளில் வேலைகள் செய்யும்போது சிறுவர்கள் பல வகையான இன்னல்களை அனுபவிக்கின்றனர். இயந்திரங்களின் பாவனை மூலமாகவே தொழிற்சாலைகள் இயங்குகின்றன. பயிற்சிக்காக வேலைகளைச் செய்யும்போது இயந்திரங்களின் பாவனையால் சிறுவர்கள் அங்கவீனர்கள் ஆகின்றனர்.

அண்மையிலே தென்னிலங்கையில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்த பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன் இயந்திரத்தினுள் தவறுதலாகக் கையை வைத்ததனால் அவனது நான்கு விரல்கள் துண்டிக்கப்பட்டன. இதற்குக் காரணம் தொழிற்சாலையில் கையுறைகளின் பாவனை காணப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. விசாரணைகள் இடம்பெற்று தொழிற்சாலை இயக்குநருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது. ஏனெனில், சிறுவர்களைத் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தியதற்காகவும் போதிய பல வசதிகளை அளிக்கமறுத்தமைக்காகவுமே அபராதம் விதிக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

### சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர் துஷ்பிரயோகத்தை நாம் பின்வருமாறு வரையறுக்கமுடியும். அதாவது சிறுவர்களின் சுகாதாரத்திலும், முன்னேற்றத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அநாவசியமாக அவர்களைத் துன்பத்துக்கு உள்ளாகுகின்றது. சிறார்களின் தேவைகளை நிறைவேற்றுவதைத் தவிர்த்து சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்தைப் பாதிக்கும் அனைத்துக் காரணிகளுமே சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும். சுருக்கமாகக் கூறினால், சிறுவர் சமவாயத்திலே குறிப்பிடப்பட்

**மகாதேவன் ஜெயசுதன்**
உரும்பிராய்
(யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்)

டுள்ள சிறுவர்களின் உரிமைகளை மீறி சிறுவர்களை நடத்துதல் சிறுவர் துஷ்பிரயோகம் எனக்கூறலாம்.

உலகளாவிய ரீதியிலே பல நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறாத நாடுகளே இல்லை எனக் கூறுமளவிற்கு சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருகிறது. இந்தியா, சியாராலியோன், லைபீரியா, இலங்கை, கென்யா போன்ற நாடுகளில் அதிகமான அளவில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. இன்று உலகெங்கிலும் ஐந்து லட்சம் சிறுவர்கள் அநாதைகளாக இருக்கின்றனர். இந்நிலைமை மிகவும் வேதனைக்குரியது.

சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் தெரிவித்த அறிக்கையின்படி 1995, 1996 காலப்பகுதியிலே இலங்கையில் பத்தாயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் சட்டங்கள் மூலமாகத் தண்டனைகள் அளிக்கப்பட்டவை. எனவே, சட்டத்திற்குத் தெரியாத பல துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. துஷ்பிரயோகங்களை இரண்டு வகையாக நாம் நோக்கலாம். அவற்றில் ஒன்று உடல் ரீதியான துஷ்பிரயோகம். மற்றொன்று உள ரீதியான துஷ்பிரயோகம்.

சிறுவர்களுக்கு உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் ஏற்படுவதற்கு பல காரணிகள் காரணமாக அமைகின்றன. சிறுவர்களுக்கு போஷணைச் சத்து நிறைந்த உணவுகள் சில வேளைகளில் கிடைக்காது போகின்றமை, சிறுவர்மீது பாலியல் வல்லுறவுகளை மேற்கொள்ளல், பல வேலைகளைச் செய்யுமாறு பணித்தல், யுத்தங்களுக்குப் பயன்படுத்தல், கொடிய தண்டனைகள் வழங்கல் போன்ற பல காரணிகளால் உடல் ரீதியாக சிறுவர்கள் மீது துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன.

யுத்த களங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் வேலை செய்யும்போது அவர்கள் அங்கவீனர்களாக மாற்றப்படுகின்றனர்.

சிறுவர்களுக்கு உளரீதியாக ஏற்படும் துஷ்பிரயோகங்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பார்த்தால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்கள்மீது பாரிய வேலைகளைச் சுமத்தும்போது சிறுவர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

# காலம் வழங்கிய கௌரவம் - முதுமை

'முதியவர்கள் எங்களது முத்தான சொத்து' இந்த வாசகம் ஒரு திருவாசகம்போல் எங்கள் நெஞ்சில் ஆழப்பதிந்துள்ளது. இது எல்லோர் நெஞ்சிலும் பதியவேண்டிய, கல்வெட்டுக்களாய் பொறிக்கப்படவேண்டிய வாசகமாகும். முதியவர்கள் எங்களது வாழ்க்கைக் குறிப்பில் முன்னுரையாகத் திகழவேண்டியவர்கள். முடிவுரையாய் முடிந்துபோக வேண்டியவர்கள் அல்லர். அவர்கள் எங்களை வாழ வைக்கும் கண்கண்ட தெய்வங்கள்.

ஆதாம் ஏவாளின் மனிதத் தொடர்ச்சியில்.... குழந்தையாகப் பிறந்து, தவழ்ந்து, எழுந்து கைவீசி, சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என நீண்டு செல்லும் நிலையில்லா நீர்க்குமிழி போன்ற மனித வாழ்வில் விரும்பியோ, விரும்பாமலோ இந்த மண்ணில் பிறக்கும் அனைவரும் 'முதியவர்' என்ற பாத்திரத்தை ஏற்கத்தான்வேண்டும். (ஒரு சில விதிவிலக்கு இருக்கலாம்) ஆனால், இந்த உண்மையை ஏற்க எமது சமூகம் மறுக்கிறது. குறிப்பாக எமது இளம் சமுதாயம் இப்போதே தமக்கு குழிதோண்டிக் கொள்கிறது.

இன்று வீட்டிலும் சரி, றோட்டிலும் சரி, ஏனிந்த நாட்டிலும் சரி முதியவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். முதுமை என்ற காரணத்தால் தட்டிக்கழிக்கப்படுகிறார்கள். எமது தாய் தந்தையருக்கு முதுமை என்னும் பட்டத்தை வழங்கக் காலம் உரிய நேரத்திற்காகக் காத்திருக்கிறது. இதற்குச் சான்றாக எமது பெற்றோர்களின் பெற்றோர்களுக்கு (பாட்டன், பாட்டி) முதுமை என்ற பட்டத்தை காலம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது. இதனால் இன்று இவர்களது நிலை மரணக்கனியை எப்போது பிடிப்போம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இவர்களுக்கு ஏன் இந்த நிலைமை? விடை தெரிந்திருக்கும். இன்று எல்லோரும் கேட்கும் கேள்வி இது. பெற்ற பிள்ளைகளாலேயே இவர்கள் (முதியவர்கள்) சனியன், மூதேசி, பழசு என்றெல்லாம் விரட்டப்படுகின்ற அவலநிலை எங்களது நெஞ்சில் வேலைப் பாய்ச்சுகிறது.

தங்களது முதியத்திலே தாங்கள் சேகரித்துக் கட்டிய உறைவிடத்தில் நிம்மதியாகத் தூங்கமுடியாத நிலையில் - எழுந்து ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது தள்ளாடும் வயதில் - உடல் தளர்ந்து பெரும் இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.

இவை எல்லாம் முதியவர்கள் என்ற காரணத்தினாலா? வீதியில் செல்லும் முதியவர்களை இளையவர்கள் தகாத வார்த்தைகளால் ஏசுதலும் முறையற்ற விதத்தில் கிண்டலடித்துச் செல்வதும் நாளுக்கு நாளாகத் தொடர்ந்த வண்ணம் இருககின்றது. இதைப் பார்த்துக்கொண்டு சட்டமானது இருட்டறைக்குள் ஒளித்துக் கொள்கிறது. இப்படியானால் முதியவர்கள் இம்மண்ணில் வாழத் தகுதியற்றவர்களா? காலம் சீண்டிவிட்டு மௌனித்துக் கொள்கிறதா?

திக்குத்திசை தெரியாத விதியென்ற காட்டிலே நாம் அனைவரும் வழிகள் வேறுபட்டுப் பயணிக்கின்ற பயணிகள்தான். ஆனால், எந்த வழியூடாகப் பயணித்தாலும் சென்றடையும் இலக்கு ஒன்று. போர் அனர்த்தம், பொருளாதாரச் சுமை மற்றும் பல்வேறு காரணிகளால், தாய்க் கோழியை விட்டுப் பிரிந்த குஞ்சுகள் போல, தாய்வேறாக, தகப்பன் வேறாக, பிள்ளைகள் வேறாக சொந்த நாட்டில்கூட கட்டுக்கோப்பான கூட்டுக் குலைந்து திக்கொன்றாகப் பிரிந்திருக்கும் அவலம். இந்தப் பிரிவுகளினால் வயோதிபர்கள் ஆதரவு இன்றிப் பாதிக்கப்படுகிறார்கள். யுத்த ஆக்கிரமிப்புக் காலங்களில் வீட்டைப் பாதுகாக்க, வீட்டிலுள்ள உடைமைகளைப் பாதுகாக்க முதியவர்களையே காவலுக்கு இருத்திவிட்டு பாதுகாப்பான இடம்தேடும் பிள்ளைகள்! பரிதாபம். முதுமை என்ன செய்யும்? முதுமைக்குத் தனிமை ஒருபுறம் வாட்ட மறுபுறம் வெடியோசைகளின் மரண அச்சுறுத்தல்கள்! அத்தோடு அவர்களது பசிக்கின்ற வயிற்றுக்கு தீனியை யார் போடுவார்? இதைவிட நெஞ்சை அடைக்கும் துயரம் என்னவெனில் அங்கவீனமான, சித்த சுவாதீன மற்ற வயோதிபர்கள் இம்மண்ணில் எண்ணிக்கையில் குறைவின்றி ஏராளமாய் உள்ளனர். இவர்களை யார் காப்பாற்றுவார்? இறுதியில் மரணதேவதையின் கரங்களைத் தவிர அவர்கள் காணப்போவது எதை?



வெளிநாடு, வெளிநாடு என்று இம்மண்ணை விட்டு ஏராளமானவர்கள் வெளியேறிப் போகின்றனர். இப்படியாகப் பிள்ளைகள் பெற்றவர்களை விட்டு வெளி யேறிச் செல்வதால் முதியவர்கள் உறுதுணையின்றி உழுத்துப்போய் மண்ணுக்கு உரமாகின்றனர். காரணம், காலடியில் காசு கொட்டிக் கிடந்தாலும் கருணைகாட்டி காரியம் செய்ய, ஆதரவுக் கரம் நீட்டி அரவணைக்க யாரும் இல்லை என்ற சோகநிலை. இங்கே இப்படி இருக்க பிள்ளைகளோடு ஒட்டிக்கொண்டு வெளிநாடு செல்லும் முதியவர்கள் நிம்மதியாக வாழ்கிறார்களா? அதுவும் இல்லவே இல்லை. பிள்ளைகள் வேலைக்குப் போய்விட காற்றுப் புகாத நாலு சுவருக்குள் அடைபட்டு இன்னலுறும் நிலை. சிலர் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் வேதனைகளைத் தாங்கமுடியாது அங்கேயே தமது வாழ்வை முடிக்கின்றனர். இதற்கு வழிதேடவே, தாம் மரணிக்கும் தறுவாயில் நிம்மதியாக மரணத்தை தழுவிக்கொள்ளவே முதியவர்கள் விரும்புகிறார்கள். இதற்காகத்தான் நாட்டின் சில இடங்களில் முதியோர் பராமரிப்பு இல்லங்கள் நிறுவப்பட்டு முதியோர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இது போற்றத்தக்கது. உண்மையுள்ள, உறுதியான பற்றுள்ள, பாசமுள்ள பிள்ளைகளானால் இத்தகைய பராமரிப்பு இல்லங்கள் தேவையில்லை. வயது வந்த பெற்றோர்களை பிள்ளைகளானவர்கள் பாதுகாக்கவேண்டும். ஏன் பேரப்பிள்ளைகளானவர்கள்கூட நாளை தமக்கும் இந்த நிலை வரும் என்று சிந்தித்தால், முதியவர்கள் தேவையறிந்து சேவையாற்றினால் இவர்களுடைய முதுமைக்காலமும் இனிதாகக் கழியும். இதற்கு எமது சமயங்களும், சமூகங்களும், முற்போக்கு இயக்கங்களும் ஆற்றவேண்டிய முதியோர் பராமரிப்புப் பற்றிய விழிப்புணர்வுப் பணி மிக முக்கியமானது. ★

எம்.சுதேசிகன்

# சிறுவர் உரிமை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனம் அழுகிறது. பிறப்பின் போதோ அல்லது பிறந்த சில வருடங்களின் பின்னரோ அநாதைகளாக சிறுவர்கள் மாறும்போது, போதிய அரவணைப்பை எவரிடமும் பெறாதவேளை அவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். மனதிலே ஏற்படும் விரக்தியானது சிறுவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக மாற்றுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுவனின் மனம் போதைப் பொருளைப் பாவிக்கத் தூண்டும் அல்லது களவு, கொலை, தவறான சில பழக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

### துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு

கடந்தகாலங்களைவிட தற்போது இலங்கையிலே அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுவருகின்றன. இவற்றிற்கான பல காரணங்களிலே மிகவும் முக்கியமானவையாக பின்வருவன அமைகின்றன.

கிராமங்கள் பல பட்டினங்களாக மாறியமையால் ஏற்பட்ட தொழிற்சாலைகளினது வளர்ச்சியும், சனத்தொகை அதிகரிப்பும். மற்றொன்று அரசு தந்த திறந்த பொருளாதாரக் கொள்கை. மேலும் உல்லாசப் பிரயாண அபிவிருத்தி, சுதந்திர வர்த்தக வலயங்கள் இலங்கையில் அமைக்கப்பட்டமை என்பவற்றையும் பிரதான காரணங்களாகக் கூறலாம். உல்லாசப் பிரயாணிகள் இலங்கையில் பல சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றில் மிகவும் முக்கியமானது சிறுவர்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதாகும். இதனால் பலவகையான பாலியல் நோய்களும், உளரீதியான பாதிப்புகளும் சிறுவர்களுக்கு ஏற்படுகின்றன.

எனவே, சிறுவர் துஷ்பிரயோகங்களை எம்மால் இயன்றளவு ஒழிப்போம். நாளைய தலைவர்களாக எங்கள் கைகளிலே இன்று தவழ்கின்ற சிறார்களின் உரிமைகளை வளர்த்தெடுப்போம். அனைத்துலக சிறுவர் தினமான இன்றைய தினத்திலிருந்து ஒவ்வொருவரும் சிறுவர் உரிமை பேணுவோமென உறுதிகொள்வோம். ☆

## 'மனித உன்னதம்' கண்காட்சி

செம்பியன்பற்று,ஒக்.1

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம் நடத்தும் 'மனித உன்னதம்' கண்காட்சி எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 5ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார். (எ-ரி)

## குளங்கள் புனரமைப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் தூர்ந்து போயுள்ள குளங்கள், வாய்க்கால்கள் நியாப் அமைப்பினால் புனரமைக்கப்படவுள்ளன. மேற்படி புனரமைப்புத் தொடர்பான விவரங்களை அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களையும் கிராம அலுவலர்களையும் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினர் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பளை பாடசாலைகளில் இடநெருக்கடி

வடமராட்சி,ஒக்.1

பளைப் பகுதியில் மீள இயங்க ஆரம்பித்துள்ள பாடசாலைகளில் நாளுக்கு நாள் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும்- இதனால் அங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளை நகரின் மத்தியில் இயங்கும் வேம்பொடுகேணி வித்தியாலயத்தில் ஏனைய பாடசாலைகளை விட மாணவர் எண்ணிக்கை திடீரென உயர்ந்து வருவதாகவும் கூறப்பட்டது. (எ-182)

## கற்றல் உபகரணம் வழங்கும் வைபவம்

வடமராட்சி கிழக்கு,ஒக்.1

வடமராட்சிப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இன்பர்சிட்டி ஞானியார் கல்விக்கழகம் கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

மேற்படி உபகரணம் வழங்கும் வைபவம் ஞானியார் கல்விக் கழகத்தின் தலைவர் வே.நவரத்தினராசா தலைமையில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கமலானந்தன் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-182)

## அதிகரித்த கட்டணம் பயணிகள் விசனம்

தென்மராட்சி,ஒக்.1

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் முகமாலையிலிருந்து கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில் பயணிகளிடமிருந்து அதிகரித்த கட்டணம் அறவிடப்படுவதாகக் கூறப்பட்டது.

முகமாலையிலிருந்து கொடிகாமத்திற்கு !0ருபாவும், சாவகச்சேரிக்கு 15 ருபாவும் கட்டணமாக அறவிடப்படுவதாகவும் -

மினிபஸ்களில் இதனை விடக் குறைந்த கட்டணமே அறவிடப்படுவதாகவும் - பொதுமக்கள் தெரிவித்தனர். (எ-117)


## தவறிவிட்டது

கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த M.சுதர்சினி என்பவருடைய ஒரு தொகைப் பணமும், கையடக்கத் தொலைபேசியுமடங்கிய பை ஒன்று உதயன் பணிமனையிலிருந்து ஸ்ரான்லி வீதியில் உள்ள Kings Electronic கடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V.மணிவண்ணன், சிற்றிஸ்ரார், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8913)

## நன்றிகூறுகின்றோம்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ருபா ஒரு லட்சம் ஒதுக்கீடு செய்து உதவிய தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் சிறப்பாக எமது தேவையை நேரில் பார்வையிட்டு உதவி வழங்கிய

கௌரவ

**ஜீ.ஜீ.பொன்னம்பலம் கஜேந்திரகுமார்**

(யாழ்.நா.உ.)

அவர்களுக்கும் மனங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், வரணி.
(8914)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1929 - 02 - 24

மறைவு 1997 - 09 - 26

**அமரர் வேலுப்பிள்ளை நற்குணராசா**

*சிரித்த உன்முகம் நேரான உன்பார்வை*
*தெரிகின்றதே இன்றும் எம் நெஞ்சங்களில்!*
*ஆண்டுதான் ஐந்து கடந்ததே தவிர - உன்*
*ஆறாத நினைவுகள் அகலவில்லை!*
*ஆண்டவன் அடியில் நீயிருக்க*
*நாமிங்கு அஞ்சலித்தோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*
(8904) - குடும்பத்தினர்.

## தீராத நினைவுகளோடு...

மாதமொன்று சென்றது



உடலோடு 1933 - 06 - 03

உடல்கழற்றி 2002 - 09 - 01

**சோதிமுத்து முருகேசு**

வருடமொன்று கழிந்தது



உடலோடு 1939 - 11 - 13

உடல்கழற்றி 2001 - 10 - 05

**முருகேசு அரியமலர்**

காலையும் வெந்தது
மாலையும் வெந்தது
ஆறாப்புண்ணின் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின்நினைவு.

*674, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*
(8916 - குடும்பத்தினர்.

## நன்றி கூறுகின்றோம்

என்னால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், ருபா 3200/= அடங்கிய பேர்ஸ் என்பவற்றை நேற்று இ.போ.ச. (சாலை) பருத்தித்துறையில் பெற்றுக்கொண்டேன். ஆகவே, எனக்கு உதவி செய்த இ.போ.சவின் சகல ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*வட்டுக்கோட்டை.* (8912) திருமதி தி. குமாரகுலசிங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவி

**செல்வி காங்கேயன் ஜனனி**

அவர்கள் 2002ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 122 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். அவரையும் அவருக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(8903) - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவன்

செல்வன்

**க.சாயிஸ்கந்தன்**

அவர்கள் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 161 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 10ஆம் இடத்தைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

*52/9, உடையார் லேன்,*
*கந்தர் மடம்,*
*யாழ்ப்பாணம்.* (8918)

அப்பா, அம்மா, தம்பி, மாமன்மார், மாமிமார், அம்மம்மா, சித்தி, மச்சாள்மார்.

## VACANCIES

A Civil Engineering Contractor is hereby inviting application for the following post from suitable candidates.

(1) Civil Engineer with B.Sc.(Eng.) and minimum 1 year experience.

(2) Technical Officer with N.D.T. (Civil) and 10 year experience or equivalent.

The application with copy of relevant qualification and experience certificate must reach us on or before 07.10.2002.

**Managing Director**
**Visvakarma (Pvt) Ltd.**
**No. 28, Thirunelvely South, Jaffna.**

T.P. No.: 021 2222996 (8910)

## கண்ணீர் அஞ்சலி

வீதி அபிவிருத்தி அதிகாரசபை வடமாகாணப் பணிப்பாளராகிய திரு.வே.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத்தந்தையார்

**கார்த்திகேசு வேலாயுதம்**(அப்பாத்துரை)

அவர்கள் இறையடி எய்தியமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு, பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளர்,
சக உத்தியோகத்தர்கள்.

நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பளைப் பிரிவு. (8902)

## மரண அறிவித்தல்

### கந்தையா தம்பையா

வடலியடைப்பைச் சேர்ந்த கந்தையா தம்பையா நேற்று(30.09.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் டிகேந்திரதேவி (கனடா), கேதீஸ்வரன்(அமெரிக்கா), பரிமளதேவி, நகுலேஸ்வரன்(சுவிஸ்), ஜெகதீஸ்வரன், நிர்மலாதேவி, காண்டீபன்(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சண்முகராசா, விஜயமாலா, ரவீந்திரன், ஜெயகுணேஸ்வரி ஆகியோரின் அருமை மாமனாரும் ஹயாஜினி, விருபாஷின், நவதீஸ், கபில்றாஜ், பூஸன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.10.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வடலியடைப்பு.* (8909)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## 'சிறுவரை இல்லங்களுக்குக் கொண்டு வருதல்'

# சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாடு இன்று கொழும்பில் கோலாகல ஆரம்பம்

**உலக சிறுவர் தினமான இன்று சிறுவர் உரிமைகளைப் பேணு வது தொடர்பான மாநாடு ஒன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து மூன்று தினங்க ளுக்கு இந்த மாநாடு நடைபெறும். அதனையொட்டி இந்தக் கட் டுரை பிரசுரமாகின்றது. மாநாட் டின் நோக்கம், அதன் நடை முறை என்பன தொடர்பாக இந்தக் கட்டுரை விளக்குகின் றது.**

நெருக்கடியான காலப் பகுதி களில் ஏற்பட்ட அசௌகரியமான, அபிவிருத்திக்கு உட்படுத்தப்படாத, முரண்பாடுச் சிக்கலான, சூழ்நிலை களிலிருந்த சிறுவரை எவ்வாறு விடுவிப்பது என்றும் -

அவர்களை நாளாந்த வாழ்வுக்கு எங்ஙனம் கொண்டு வருதல் என்பது தொடர்பாக பலதரப்பட்டவர்களது அல்லது அமைப்புக்களது அனுபவங் களைப் பகிர்ந்து கொள்வதற்கும் -

அவற்றினை நடைமுறைப் படுத் துவதனூடாக இயல்பு வாழ்வை உறு திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் தொடர் பாகக் கலந்துரையாடல் நடத்தப்பட்டு முடிவுகள் எடுக்கப்படு வதற்காக, தலை நகர் கொழும்பில் 'றான்ஸ் ஏசியா ஹோட்டலில் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு சிறுவர் பாது காப்பு ஒன்றியத்தினரது ஏற்பாட்டில் சிறுவரை இல்லங்களுக்குக் கொண்டு வருதல் [Bringing children home] என்கின்ற தலைப்பில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்தும் கலந்துகொள்ள வுள்ள நிபுணர்கள், பேராளர்கள், அனு பவசாலிகள், கல்விமான்கள் மேற்படி விடயம் தொடர்பாகப் பல்வேறு கலந் துரையாடல்களினையும், நிகழ்வு களினையும் இத்தினங்களில் நடத் துவர்.

சிறுவர் உரிமைகள் சமவாயம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 1989 நவம்பர் 20ஆம் திகதி அனைத் துலக பொது ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகள் அதனை அனைத்துலகச் சட்டமாக ஏற்றுக்கொண்டன. அநேகமான நாடு கள் (இலங்கை உட்பட) ஆவணத் தில் கூறப்பட்டிருக்கும் உறுப்புரை களினை மதித்து அமுல்படுத்தினா லும், சில நாடுகளில் நிகழும் போர் அல்லது அனர்த்த சூழ்நிலைகளில் சிறுவர்களது நலன்கள்/உரிமை கள் கேள்விக்குறியானதாகக் காணப் படுகின்றது. இதனை எம்மில் அநே கர் நாளாந்த வாழ்வில் பல்வேறு சூழ லில் கண்டுள்ளோம். இத்தகைய நிலைமைகள் இன்று அநேகமான நாடுகளில் இடம்பெறும் சிவில் யுத் தம் காரணமாகவோ அல்லது நாடு களுக்கு இடையே நடைபெறும் போர் காரணமாகவோ ஏற்பட்டுவிடுகின்றது. இத்தகைய நிலைமைகளினால் இல் லங்களில் சிறுவர்கள் சேர்க்கப்படல், அநாதைகள் ஆக்கப்படல், தெருவோர சிறுவர்கள், பிச்சை எடுக்கும் நிலைக்கு சிறுவர்தள்ளப்படல் போன்ற பல் வேறு சிக்கலான நிலைமைகளுக்கு சிறார்கள் உள்ளாக்கப்படுகின்றார் கள்.

எனவே, இவ்வாறான நிலைகளில் இருந்து சிறுவர்களை எங்ஙனம் பாது காத்தல் என்பது தொடர்பாகவும் அவர்களை இயல்பு வாழ்வுக்கு எங்ங னம் கொண்டுவருதல் என்பது தொடர் பாகவும் ஆராய்வதாக இம்மாநாட்டு விடயங்கள் அமைந்திருக்கும்.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஏற் கனவே இணையம் மூலமும், ஊட கங்களினூடாகவும் வெளியிட்ட தக வல்களின் அடிப்படையில் ஏறத்தாழ 250 பேராளர்கள் இம்மாநாட்டில் பங் குபற்றுவதற்கு பல்வேறு நாடுகளிலி ருந்தும் தமது பதிவுகளினை உறு திப்படுத்தியுள்ளனர். இவர்களில் அநே கர் தமது அனுபவங்களினை; திட் டங்களினை அனைத்துப் பங்குபற்று நர்களுக்கும் கலந்துரையாடல, விரி வுரை என்பன மூலம் சமர்ப்பணம் [Presentation] செய்வர். ஒவ்வொரு வருடைய ஆக்கமும் (தனிப் பட்ட அல்லது அமைப்பினது) 20 நிமிடம் கொண்டதாக (10 நிமிடப் பொதுக் கலந்துரையாடல் நேரம் உட்பட) இருக்கும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்து உள்ளன. இச்சமர்ப்பணங்களில் கூறப்படும் விடயங்கள், ஆவணங்கள் யாவும் ஏற் பாட்டுக் குழுவினரது அனுமதி பெற்று சமர்ப்பணத்திற்காகக் காத்திருக்கின் றன.

இத்தகைய சமர்ப்பணங்கள், தீவிர மான ஆயுதம் சார் நெருக்கடியான ஒரு சூழ்நிலைகளில் சிறுவர்களு டன் வேலைசெய்த இலங்கையரும் மற்றும் வெளிநாட்டவரும் தமது அனு பவங்களினையும், பயிற்சிகளினை யும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பங்களினை வழங்கு வதனையும் -

நீண்டகால நெருக்கடி நிலைமை களிலிருந்து சிறுவரை விடுவித்துக் கொள்வதற்குத் தேவையான வழி வகைகளையும், மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களையும் இனங் காணல் -

ஆகிய இரு நோக்கங்களினையே முதன்மையானதாக - மையமானதாக - கொண்டிருக்கும். மேற்படி நோக் கங்களுக்கு மேலதிகமாக பாது காப்பு [protection], முன்னேற்றம் [Development], பங்களிப்பு [Participation] ஆகிய உபதலைப்புக் களும் சமர்ப்பணத்தில் மையப்படுத் தப்பட்டிருக்கும். அத்துடன், கைவி டப்பட்ட சிறுவர்கள் [Seprated children], விளையாட்டும் பொழுது போக்கு அம்சங்களும் [Play & recreation], உளவியற் பாதுகாப்பு [Psychosocial care], சிறுவர் தற் கொலை [Suicideamong children], சிறுவர் போராளிகள் [Children Soldiers], நெருக்கடியான சூழ் நிலைகளில் அல்லது அமைதி முயற் சிகளில் சிறுவரை ஈடுபடுத்தல் [Involving children in efforts on conflict resolation and peace building] போன்ற விடயங்களில் ஒன்றினை மையப்படுத்தியதாகவும் அமர்வுகள் காணப்படும்.

மாநாடுநடைபெறும் தினங்களில் 'போருக்குப் பின்னான சிறுவர் வாழ்வு' என்ற தலைப்பில் பல்வேறு மாவட்டச் சிறுவர்களும் வரைந்து அனுப்பிய ஓவியங்களில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களி னைக் கொண்ட ஓவியக் கண்காட்சி நிகழ்வும் சிறப்பம்சமாக நடைபெற வுள்ளது. சிறுவர் தொடர்பாடல் குழுக்கள் [Kids in touch Groups] மூலம் இந்த ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு கண்காட்சிக்கு வைக் கப்படத் தயாராக உள்ளன.

மேற்படி மாநாட்டிற்கு சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராச்சியம்) யாழ்ப்பாணம் தமது பங்காளர்களு டன் இணைந்து [Save the children (UK) with the partners) பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்துள்ளது.

அவையாவன:-

☆ஓவியக் கண்காட்சிக்கு வேண் டிய ஓவியங்களை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள குழுக் கள்மூலம் பெற்று யாழ்.மாவட்டச் சிறுவர்களது பங்களிப்பை உறுதி செய்தமை.

☆சிறுவர் பாதுகாப்பு (ஐக்கிய இராச்சியம்) மற்றும் மாவட்டச் சிறு வர் பாதுகாப்புக் குழு [Districtchild protection committee] இணைந்து யாழ்.மாவட்ட சிறுவர்களது நிலைமை தொடர்பாகவும் சமர்ப்பணங்களைச் செய்ய உள்ளமை.

☆மாநாட்டின் விடயங்களை ஊட கங்கள் மூலம் பரப்புரை செய்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களை கவனத்தில் கொண்டுள்ளது.

சிறுவர்களது நலன்கள் தொடர் பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட அமைப் புக்களினால் 'அமைதியான சூழ்நிலை' என்று கூறப்படுகின்ற தற்போதைய சூழலிலும் (இலங்கையில்) மதிக்கப் படாத நிலையிலும் -

அத்தகைய ஒப்பந்தங்களில் கூறப் பட்ட விடயங்களில் ஓர் அசமந்தப் போக்குக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையிலும் -

இம்மாநாடும் மாநாட்டில் எடுக்கப் படும் முடிவுகளும் இலங்கை அரசை யும் மற்றும் அமைப்புகளினையும் சிறு வர் நலன்தொடர்பாகச் சிந்திக்க வைக்கும், செயற்படத் தூண்டச்செய் யும் என அனைவருமே எதிர்பார்க் கலாம்.

**ஜெ.தற்பரன்**

மாநாட்டில் பங்குபற்றுவது மட்டு மன்றி, மக்களாகிய நாம் ஏதோ ஒரு வகையில் சிறுவர்களோடு தொடர் புடையவர்கள் என்றவகையில் எமத ளவில் செய்யவேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு. மாநாட்டின் விட யங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல், அங்கு எடுக்கப்படும் முடி வுகள் குறித்து அறிந்து கொள்ளல், அவற்றை நடைமுறைப்படுத்துவ தற்கு [Implementation or, come intoforce] சிறுவர் உரிமைகளினை பெற்றுக்கொடுக்கும் பெரியவர்கள் என்ற வகையில் இயன்றளவு உதவு தல், ஒக்ரோபர் 1 (சிறுவர் தினம்) உட்பட எமது நாளாந்தச் செயற் பாடுகளில் சிறுவர்களது உரிமைக ளினை அல்லது சிறந்த நலன்களி னையே மையமாகவும், முதன்மை யாகவும் கொள்ளல் போன்றன எமது பங்களிப்பாக உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை பல்லாண்டு காலமாக நடைபெற்ற போர் காரணமாக இடம்பெற்ற பல் வேறு சூழ்நிலைகளினாலும், சந் தர்ப்பங்களினாலும் வாழ்வைத் தொலைத்துவிட்டு அல்லலுறும் சிறு வர்களுக்கு இம்மாநாட்டில் எடுக்கப் படும் முடிவுகளும்; ஏனைய (சிறு வர்களுக்கு மட்டுமன்றி அனைத்து) இலங்கையருக்கு இம்மாநாடானது சமாதானச் சூழலில் நடைபெறும் முதலாவது சர்வதேச மாநாடு அது வும் சிறுவர்களுக்காக என்பதாலும் - நிச்சயம் பெருமை தேடித்தரும் என்பதில் ஐயமேதுமில்லை.

எனவே, இத்தகைய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு நமது நாட்டில் நடைபெறுவதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படும் அதேவேளை, மாநாட்டில் எடுக்கப்ப டும் தீர்மானங்களினை அறிந்து கொள்ள முயற்சிக்கும் அதேவேளை, அத்தீர்மானங்களினை யதார்த்தமாக் குவதில் எமது பங்கினையும், பொறுப் பினையும் [Roles and responsibilities] நன்கு உணர்ந்து செயற் படுவதனூடாக நமது நாட்டில் மட்டு மன்றி சர்வதேச ரீதியிலும் நமது செயற்பாடுகளினை சிறுவர்களினை மையப்படுத்தி, முதன்மை நிலை யில் செயற்பட திடசங்கற்பம் கொள் வோம்.

☆

## ஆதங்கம்

உருவத்தில் சிறியவர்கள் இவர்கள், ஆனால்
உள்ளத்தில் உயர்ந்த செயல் விளைந்து நிற்பர்.
பருவமது பாக்கை மாற மாற
பண்பான பல செயல்கள் செய்யத் துடிப்பர்.
பெருமனக் கொண்டு இந்தப் பிஞ்சு நெஞ்சப்
பூங்காவில் நுழைவதற்கு யார் துணிவார்?
கருவிழிகள் மலர்ந்து செயல் புரிவதற்கு
கண்ணியமாய் வழிகாட்ட எவர் வருவார்?
தாது சென்று நீதியதை இடித்துச் சொல்ல
[illegible] மாத்மாக்கள் பிறக்க வேண்டும்.
நாதியின்றி பரிதவிக்கும் மக்களுக்கு
நகைமுகங்கள் காட்டுபவர் பெருகவேண்டும்.
எவராலும் செய்தரிய அரும்பணியாம்
ஆசிரியப்பணிக் கடலில் அமிழ்ந்து நிற்போர்
புவிபோற்றும் அரும்பணிகள் செய்வதெப்போ?
பூஞ்சோலை என இவரை நினைப்பதெப்போ?
ஆழத்தே புதைந்துள்ள நல்ல முத்தை
நலமாக முன்னெடுத்துச் செல்வதெப்போ?
உள்ளத்தே உண்மை ஒளி நாளும் பெற்று
உவகையுடன் தம் பணியைப் புரிவதெப்போ?
புரிந்துணர்வு நாட்டினிலே மலர்ந்த போதும்,
(சிறுவரைப்) புரியாத உணர்வுநிலை
மறைவதெப்போ?
பரிந்துவரில் அன்புதனைப் பொழிந்து பாசப்
பிணைப்புடனே பணியை இவர் செய்வதெப்போ?

'சீர்திருத்தம்' என உரைத்து ஆர்ப்பரிப்போர்
சீராகத் தம் பணியில் திளைப்பதெப்போ?
பார் புகழும் முழுமனிதம் நிறைந்தோராக
பாரினிலே பலரை யாம் காண்பதெப்போ?

-ன்னார், அமுது.

## எதிர்கால விழுதுகளே சிறுவர்களே கேளீர்!

அன்னையென்றும் தந்தையென்றும் இருவர் சேர்ந்தே
அல்லிரவில் எழுதிவைத்த 'கவிதை' நீங்கள்
பின்னர் வரும் உலகத்தார் உவைப்படிக்கப்
பெருமைமிகு "காவியமாய்" வளரவேண்டும்.
தன்னாலே வளர்வதுதான் உடலம், ஆனால்
சலியாத படிப்பாலே, உழைப்பினாலே
பொன்னான மூளைவளம் வளர வேண்டும்,
புவிநூல்கள் அத்தனையும் படிக்க வேண்டும்.
மூளையென்னும் மூலதனம் பெற்ற நீங்கள்
முழுநிலா அளவினிலே பிறக்கின்றீர்கள்!
'நாளை' என்ற விடிவானம் தோன்றுதற்கு
நற்சேதி தரும் 'வெள்ளி' மீனாய் வந்தீர்
காளைகளாய் வளர்கின்றீர் துள்ளுகின்றீர்!
காதலிலும் மோதலிலும் மூழ்குகின்றீர்
வேளை என்ற இறப்புவந்து கொத்தும் முன்னர்
வியனுலகில் நும் பெயரைச் செதுக்க வேண்டும்.

மதுரகவி. காரை. எம். பீ. அருளானந்தன்

## நிறைவாழ்வு தமிழர்காண முதியோரே நீடூழி நீங்கள் வாழ்க!

கலங்கரை விளக்கம் இன்றேல்
கப்பல்கள் கரையா சேரும்?
உலவிடும் நிலவே இன்றேல்
ஒட்டார இருட்டா ஓடும்?
மலை போன்று காவல் காக்கும்
மன்னவரே! நீங்கள் இன்றேல் இன்றோ
நிலையாகத் தமிழருக்கு
நிம்மதி சேர்ப்போர் யார்? யார்?

நீடூழி நீங்கள் வாழ்ந்தால்
நெடுந் தமிழ் வாழும்! மண்ணில்
நீடூழி நீங்கள் வாழ்ந்தால்
நீள் வண்மை நிலைத்தே வாழும்
நீடூழி நீங்கள் வாழ்ந்தால்
நிலைக்காதா நீதி? நின்று
நீடூழி நீங்கள் வாழ்க
நிறை வாழ்வு தமிழர் காண

- கவிமாமணி.

# சேந்தாங்குளம் ஊடாக கீரிமலை செல்லமுடியும்!

## சிப்பாய் ஒருவரும் கூட வருவார்

கீரிமலையிலுள்ள புனித தீர்த்தக் கரைக்கும் ஸ்ரீ நகுலேஸ்வர ஆலயத் திற்கும் பொதுமக்கள் சேந்தாங்குளம் இராணுவ சோதனைச் சாவடி ஊடாக சென்று வருவதற்கு கடந்த வாரம் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தெல்லிப்பழை யிலுள்ள இராணுவ சோதனைச் சாவ டியூடாகவே கீரிமலைக்குச் சென்று வருவதற்கு படைத்தரப்புப் பொதுமக் களுக்கு அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே.

சேந்தாங்குளத்திலுள்ள இராணு வச் சோதனை முகாமில் தேசிய அடையாள அட்டைகள் பரிசோதிக்கப் பட்டதும் பொதுமக்கள் தமது வாக னங்களில் கீரிமலை சென்று வரலாம் என்றும் - கூடவே ஓர் இராணுவ சிப் பாயும் வருவார் என்றும் - அறிவிக் கப்பட்டுள்ளது.

மேற்படி வீதி திறக்கப்பட்டதை அடுத்து தற்போது கொழும்பிலிருந்து வரும் பெரும்பான்மை இன யாத்திரி கர் பலர் காரைநகரிலுள்ள 'கசூரினா பீச்' கடற்கரைக்குச் சென்று அதனை பார்வையிட்ட பின்னர், இளவாலை - சேந்தாங்குளம் ஊடாக கீரிமலைக் குச் செல்வதைக் காணமுடிகிறது.

சேந்தாங்குளம் வீதி திறக்கப்பட் டதை அடுத்து இவ்வீதி வழியாகச் சென்று கீரிமலையில் அந்தியேட்டி சமயக் கிரியைகள் செய்வதற்கு வலி. மேற்கு, வலி.தென்மேற்கு பகுதிகளில் உள்ள இந்துசமய மக்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ-135)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை - 2002 இல் 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

**செல்வன் வாமதேவன் இளங்கோவன்**

அவர்களை மேலும் பல சிறப்புக்களும் பெற்று நீடூழி வாழ எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மா.சுப்பையா குடும்பத்தினர் (J.P.)
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(8927)

# கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 - 01 - 1962 | 30 - 09 - 2002 |

**செல்வி வேலுப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை**

(யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய ஆசிரியை)

30.09.2002 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது ஆசிரியை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆத்மா சாந்தி அடைவதாக!**

*யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.*

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(8928)

## நிமலராஜன் கொலை; விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கு நேற்று யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு சந்தேக நபர்களையும் 14 ஆம் திகதி வரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பாக பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நால்வர் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் அவர்களில் இருவர் வவுனியா மேல் நீதிமன்றின் பணிப்பின் பேரில் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். (ஐ-10)

## தேசியமட்ட போட்டிக்கு தெரிவானோருக்கு

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்டப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கென யாழ்மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான இலக்கங்கள் மற்றும் ஏனைய விவரங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என யாழ்வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா அறிவித்துள்ளார். (எ-ரி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யா/ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலய மாணவன்*

**செல்வன் திருப்பதிநாதன் நகுல்ராஜ்**

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002 இல் 132 புள்ளிகளைப் பெற்று மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை தேடித் தந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவரைக் கற்பித்து வழிகாட்டிய யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கும் தும்பளை வாணி கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

*கிராமக் கோட்டுச் சந்தி,*
*புலோலி தெற்கு.*
*பருத்தித்துறை.*

வே.பரமேஸ்வரன்
குடும்பத்தினர்,
சித்தப்பா, சித்தி.

(8926)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 22ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா - வீடியோ படம் பிடித்தல்

மேற்படி பட்டமளிப்பு விழா 2002.10.12ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி பட்டமளிப்பு விழாவினை அரங்கினுள் வீடியோ படம் பிடிக்கும் உரிமையை, எமது நிபந்தனையைப் பூர்த்திசெய்யும் வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு அளிக்க விரும்புகின்றோம்.

1. மேற்படி வீடியோ படப்பிடிப்புக்கான கட்டணம் எதுவும் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படமாட்டாது.
2. அரங்கினுள் எடுக்கப்படும் வீடியோப் படம் அரங்கிற்கு வெளியே எம்மால் குறிப்பிடப்படும் இடங்களில் 03 தொலைக்காட்சி பெட்டிகள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்பட வேண்டும்.
3. படப்பிடிப்புக்கான மின்பிறப்பாக்கிகொண்டுவருதல் வேண்டும்.

மேற்படி நிகழ்வினை வீடியோப் படம் பிடிக்க விரும்பும் வீடியோப் படப்பிடிப்பாளர், தமது விண்ணப்பத்தினை *உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்ற விலாசத்திற்கு 2002.10.04 அன்றோ அதற்கு முன்னதாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த வீடியோப் படப்பிடிப்பாளரைப் பட்டமளிப்பு விழாக்குழு தெரிவு செய்யும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/24027)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



| மகிழ்வில் | அதிர்வில் |
|---|---|
| 18 - 01 - 1975 | 18 - 08 - 2002 |

**திருமதி வதனி மோகனதாஸ் (சுதா)**

*சுந்தர வதனியே சுதாவே!*
*மந்திரமோ மாயமோ - உன்*
*மறைவுதான் நியாயமோ?*
*யாரோடு நோவோம் - நாம்*
*யார்க்கெடுத்துரைப்போம்?*
*ஊரொடு பகைத்தாயில்லை*
*உறவோடு சினந்தாயில்லை*
*பாரோடு தொடர்பறுத்து*
*பறந்தது ஏனம்மா?*

*இரு நீள விழியாலே சிரித்து*
*இருநூறு கதை பேசுவாயே!*
*பிறர் நோய்க்கு மருந்தாவாய் - இன்று*
*உன் நோய்க்கு விருந்தானாயோ?*

தகவல்:
ந.பிரகலாதன் (கணவன்)
*தாவடி வடக்கு,*
*காளி கோயிலடி, கொக்குவில்.* (C/24025)

- கணவர், அப்பா, அம்மா, சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

**செல்வி சிவகாமிப்பிள்ளை வேலுப்பிள்ளை**

*(ஆசிரியை, யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்)*

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவகாமிப்பிள்ளை, வேலுப்பிள்ளை நேற்று (30.09.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் வே.பாலசிங்கம், திருமதி இ.அன்னப்பிள்ளை, திருமதி அன்னப்பிள்ளை, க.ஞானேஸ்வரி, திருமதி ம.அழகம்மா, வே. நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2002) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.*

தகவல்:
வே.பாலசிங்கம்
(சகோதரன்)

(8529)

# கிளைக் குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

## ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ/து) ஊர்காவற்றுறை

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17 ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய1920/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக் குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இன் ஏற்பாடுகளுக்கமைய ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான மேற்படி விதிகளின் பிரிவு 6 இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான காலஅட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி விதிகளின் பிரிவு 7 இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளித்து நியமித்துள்ளேன் என்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகம் அளித்து, வாக்களிக்கும் உரிமை பெற்று முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்வு காரணமாக அறிவித்தல்கள் கிடையாது போகும் உறுப்பினர்கள் இந்த அறிவித்தலை தங்களுக்கு தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தல்களாகக் கொண்டு குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு தவறாது சமுகமளிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்து வரும் ஒரு பங்கின் முழுப்பெறுமதியான ரூபா 100/-வைச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமையைப் பெற்று முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினராகக் கருதப்படுவார்.

ஒவ்வொரு கிளைகளினதும் முழு உறுப்பினர், தகைமை பெற்ற உறுப்பினர் (வாக்காளர்) அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்திலும் பார்வையிட முடியும்.

*857, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

செ.கனகசபாபதி
கூ.அ.உ.ஆணையாளர்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை | திரு.க.கணேசு | 12.10.2002 | 10.00மு.ப. | தலைமைச் செயலகம் |
| 02. | பருத்தியடைப்பு | திரு.செ.திருச்செல்வம் | " | " | சுதிரேசானந்தா வித்தியாசாலை, பருத்தியடைப்பு |
| 03. | கரம்பன் செபஸ்தியார் கோயிலடி | திரு.பொ.தட்சணாமூர்த்தி | " | " | தலைமைச் செயலகம், |
| 04. | கரம்பன் கிழக்கு பாலைக்காடு | திரு.க.குகதாசன் | " | " | " " |
| 05. | பொன்னாச்சி கடைச் சந்தி | திரு.பி.ஸ்ரீகுமார் | " | " | " " |
| 06. | நாரந்தனை | திரு.கே.குமாரகுருலிங்கம் | " | " | கிளை.6, நாரந்தனை |
| 07. | தம்பாட்டி | திரு.வை.கைலைநாதன் | " | " | காந்தி சனசமூக நிலையம் |
| 08. | நாரந்தனை தெற்கு | திரு.ஐ.நாகேஸ்வரன் | " | " | கிளை.8, நாரந்தனை தெற்கு |
| 09. | புளியங்கூடல் | திரு.ஆ.நாகலிங்கம் | " | " | மகாமாரி சனசமூக நிலையம், புளியங்கூடல் |
| 10. | புளியங்கூடல் தெற்கு | திரு.த.கணபதிப்பிள்ளை | " | " | " " |
| 11. | சுருவில் | திரு.ரீ.என்.ராஜா | " | " | " " |
| 12. | சரவணை | திரு.பி.அருந்தவநாதன் | " | " | நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில |
| 13. 14 | மெலிஞ்சிமுனை, எழுவைதீவு | திரு.எம்.எஸ்.சண்முகநாதன் | " | " | கிளை.11 மெலிஞ்சிமுனை |

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தால் தயாரித்தனுப்பப்பட்ட வாக்காளர் இடாப்புக்கமைவாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் மேற்படி கூட்டம் அழைக்கப்படுகின்றது.

தி.சுந்தரலிங்கம்
தலைவர்.

(C/24026)

ரீ.எம்.டொறின்
செயலாளர்.

## 12ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# 'புலிகளின் குரல்' வானொலியின் கலை இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

புலிகளின் குரல் நிறுவனத்தின் 12ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அந்நிறுவனத்தால் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வானொலி நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், ஒளிப்படம் ஆகிய துறைகளில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டி தொடர்பான விதிமுறைகளை புலிகளின் குரல் நிறுவனம் அறிவித்துள்ளது.

விதிமுறைகள் வருமாறு:-

ஆக்கங்கள் யாவும் தமிழீழ விடுதலையை முன்னெடுப்பனவாகவோ, சமூக மேம்பாடு கருதியனவாகவோ அமையவேண்டும்.

ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படுவதுடன், அவை கையெழுத்து அல்லது தட்டச்சு பிரதியாக அமையலாம்.

போட்டியாளர்களின் பெயர், முகவரி தனித்தாளில் எழுதப்படுவதுடன், கடித உறையின் வலது மேல்மூலையில் எந்தப் போட்டிக்கான ஆக்கம் என்பதும் குறிப்பிடப்படவேண்டும்.

வானொலி நாடகமாயின் 20 நிமிடங்களுக்கு அமைவாக, 10 முதல் 12 பக்கங்களில் எழுதப்படவேண்டும். சிறுகதை 4 முதல் 5 பக்கங்களில் அமைதல் வேண்டும்.

மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதை 3 முதல் 4 பக்கங்களில் அமையலாம். கட்டுரையாயின் 10பக்கங்களில் அமைதல்வேண்டும்.

ஓவியம் வரைவதற்கு எத்தகைய வண்ண ஊடகங்களையும் பயன்படுத்த முடிவதுடன், அது 12X10 அங்குல அளவில் அமையவேண்டும். ஒளிப்படங்கள் கறுப்பு, வெள்ளையாகவோ, வர்ணப்படங்களாகவோ 6X4 அங்குல அளவில் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக, புலிகளின் குரல் நிறுவனம், நடுவப் பணியகம், யாழ்.சாலை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும். யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோர் தமது ஆக்கங்களை, புலிகளின் மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும் அனுப்பிவைக்கமுடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# மோட்டார்சைக்கிள் விபத்து: கடற்படை அதிகாரி பலி!

## மல்லாகத்தில் சம்பவம்

வலி.வடக்கு.ஒக்.1

மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கைக்கு அண்மையில் காங்கேசன் துறைவீதியில் பொதுமகன் ஒருவரதும், கடற்படை அதிகாரி ஒருவரதும் மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் கடற்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்; பொது மகன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 2.00மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்த அதிகாரி யான பண்டாரவளையைச் சேர்ந்த குமாரசிறி ரத்நாயக்கா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடற்படை அதிகாரியுடன் மோட்டார்சைக்கிளில் பின்புறத் தில் இருந்துவந்த மற்றொரு கடற்படை உத்தியோகத்தர் கையில் சிறு காயங்களுடன் தப்பிக்கொண்டார்.

விபத்து இடம்பெற்றதைத் தொடர்ந்து கடற்படை அதிகாரியும், பொதுமகனும் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு பஸ் வண்டியில் கொண்டுசெல்லப்பட்டனர். எனினும், அங்கு சிகிச்சை அளிக்கமுடியாத நிலை ஏற்பட்டதையடுத்து அவசரமாக அம்புலன்ஸ்மூலம் யாழ்.வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட சமயம் கடற்படை அதிகாரி வழியில் உயிரிழந்துவிட்டார்.

மரண விசாரணைகளின் பொருட்டு கடற்படை அதிகாரியின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-86)

## குருநகர் மக்கள் முறைப்பாடு

யாழ்.மாநகர சபையினால் குருநகர் பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவரும் குடிதண்ணீர் போதியதாக இல்லை என அப்பகுதி மக்கள் மாநகரசபையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வசித்துவருகின்ற மேற்படி பகுதிக்கு தாங்கிமூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் போதியதாக இல்லை என்றும்-

இதனால் மேற்படி பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மாநகர சபை நிர்வாகத்துக்கு பல தடவைகள் குருநகர் பகுதி சனசமூக நிலையங்களினாலும், சமுர்த்தி அலுவலர்களாலும் முறையிடப்பட்டும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## நகுலேஸ்வரத்துக்கு தமிழகத்திலிருந்து விக்கிரகங்கள்

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்வதற்காக தமிழ்நாடு மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைக்கூடத்தில் 63 நாயன்மார் உருவச்சிலைகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த உருவச் சிலைகளை இங்கு எடுத்துவருவதற்காக ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் கடந்த வாரம் தமிழ்நாடு பயணமாகியுள்ளார்.

இதேவேளை - இந்த உருவச் சிலைகளை பிரதிஷ்டை செய்வதற்காக பளிங்குக் கற்களிலான நீண்ட பீடமொன்றும் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் - 1008 லிங்கங்களைக்கொண்ட சகஸ்ரலிங்கம் ஒன்றும் மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைக்கூடத்தில் மேற்படி ஆலயத்துக்கென வடிவமைக்கப்பட்டு வருகிறது. (எ-135)

## தீவக கல்வி வலயத்தில்

# அதிபர்கள் சம்பள ஏற்றப்படி மீளப்பெறப்பட உள்ளது

மண்டைதீவு,ஒக்.1

தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் தரம்1 அதிபர்களுக்கு வழங்கப்பட்ட தேக்கநிலைச் சம்பள ஏற்றப்படி மீளப்பெறப்படவுள்ளது என வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

மேற்படி கல்வி வலயத்தில் கீழ் உள்ள பாடசாலைகளில் அதிபர்களாகவும், கோட்டக் கல்வி அதிகாரிகளாகவும் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையில் தரம்1 இல் உள்ள 5 அதிபர்களது சம்பள உயர்ச்சிக் கொடுப்பனவுகளே இவ்வாறு மீளஅறவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள உச்சநிலையை அடைந்தவர்களது வருடாந்த சம்பள ஏற்றம் நிறுத்தப்பட்டு, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இவ்வாறான தேக்க நிலைப்படிகள் வழங்கப்பட வேண்டும் என்று நிதிப் பிரமாண சுற்றறிக்கைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேக்கநிலைச் சம்பள உயர்ச்சியை உத்தியோகத்தர் ஒருவர் 5 தடவைகளுக்கு மேல் பெற முடியாது என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விதியை புறந்தள்ளிய சுற்றறிக்கை பற்றியோ அதன் இலக்கம் பற்றியோ வலயம் அனுப்பிய அறிவுறுத்தல் கடிதத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனால், தவறான அறிவுறுத்தலின்பேரில் இந்த தேக்கநிலை சம்பள உயர்ச்சி வழங்கப்பட்டதால் அது மீளப்பெறப்படவுள்ள தென்றே அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகத்தின் இந்த திடீர் அறிவிப்புக் குறித்து சம்பந்தப்பட்ட அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-ரி)

# கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித்தரம் உயர்ந்து வருகின்றது

## அத்தியார் இந்து முன்னாள் அதிபர் தெரிவிப்பு

நீர்வேலி,ஒக்.1

நகரப் பாடசாலைகளுடன் போட்டியிடும் அளவிற்கு, கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித்தரம் தற்போது உயர்ந்து வருகிறது. இதனால் நகர்ப்புற பாடசாலைகளை நாடிச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையும் தற்போது வீழ்ச்சி கண்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.விஸ்வலிங்கம். அண்மையில் இடம்பெற்ற கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

பாடசாலைக் கல்வி மாணவர்களை உயரவைக்கும் படிக்கல் போன்றது. முன்னர், கல்வியைக் கற்றுக் கொள்ளவென மாணவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து, நகர்ப்புற பாடசாலைகளுக்குச் சென்றனர். ஆனால், இப்போது அந்தநிலை மாறியுள்ளது. கிராமப்புறப் பாடசாலைகள் நகரப் பாடசாலைகளின் தரத்துக்கு உயர்ந்துள்ளன - என்றார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தனது உரையில்:-

கிராமப்புற பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டிய கடப்பாடு இந்தச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு. இப் பாடசாலை சிறப்பானதாக இருந்தாலே, இக்கிராமமும் முன்னேற முடியும். இப்பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்ய என்னாலான உதவிகளை செய்வேன் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ந.லோகேஸ்வரன், சிவஸ்ரீ கு.தியாகராசாக் குருக்கள் உட்படபலர் உரையாற்றினர்.

முன்னதாக - பாண்ட் வாத்தியம் சகிதம் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். ஸ்தாபகரின் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து விழா ஆரம்பமானது. நிறைவில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (எ-9-110)

## உலக சிறுவர் தினம் முக்ரோபர் - 01

**கருவினில் வளரும் மழலையின் உயிரில்**
**தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை**

**-பாரதிதாசன்-**

**ஒவ்வொரு குழந்தையும் மிகவும் முக்கியமானது. தாய்மை புனிதமானது. கருவினில் இருக்கும் போதே குழந்தையின் வளர்ச்சியை கண்காணித்துக் கொள்ளவேண்டும்.**

**பிறப்பு நிறை கூடுதலாக உள்ள பிள்ளை நோய்களைத் தாங்கும் தன்மையினைக் கூடுதலாகக் கொண்டிருக்கும். ஒழுங்கான கர்ப்ப காலப் பராமரிப்பு பிள்ளையின் பிறப்பு நிறையைக் கூட்டுவதில் உதவி செய்யும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் கர்ப்ப காலத்தில் தாயின் நிறை அதிகரிக்கும் விதமும், கருவின் வளர்ச்சியும் தரப்படுகின்றது. ஆரம்பகாலக் கர்ப்பகாலப் பராமரிப்பினை மேற்கொள்வதன் மூலம் சுகமான ஆரோக்கியமான குழந்தைகளை ஈன்றெடுக்கத் தாய்மாரை ஊக்குவிக்க வேண்டியது சமுகத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்..**



**4ஆம் வாரத்தில்:** கருவின் இருதயம், ஈரல், உணவு, சமிபாட்டுத் தொகுதியின் வளர்ச்சி ஆரம்பமாகும். அது சூல்வித்தகம், தொப்புள் கொடி என்பனவற்றின் மூலம் அதற்குத் தேவையான போசணையை பெற்றுக்கொள்ளும்.

முழுக்கருவினது நீளம் அண்ணளவாக 0.5 சென்றிமீற்றர் ஆகும்.



**8ஆம் வாரத்தில்:** 8ஆம் வாரத்தின் இறுதியில் சிறிய இருதயத்தின் மூலம் குருதியை வெளியேற்றுதலை ஆரம்பிக்கும். கை, கால் ஒழுங்கமைய ஆரம்பிக்கப்படுவதுடன், சகல பிரதானமான உள்அவயவங்கள் வளர்ச்சி அடைந்திருக்கும்.

மூளையின் வளர்ச்சி மேலும் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன், முகத்தின் சாயல் தெளிவாகத் தெரியும். கரு ஏறத்தாள 5 சென்றிமீற்றர் நீளமாக வளர்ந்திருக்கும்.



**12ஆம் வாரத்தில்:** அநேக பெண்களுக்கு கர்ப்பகாலத்திற்கான உடலின் இலட்சணங்கள் தென்பட ஆரம்பிக்கும் அது தற்பொழுது மிக விரைவாக அதிகரிப்பதுடன், ஒவ்வொரு நாளும் ஒருசில மில்லிமீற்றர்கள் வளர்ச்சி அடையும். அதன் இலட்சணங்கள் தெளிவாகத் தெரியும். கைவிரல்கள், கால் விரல்கள் காதுகள் (கண்இமைகள்) என்பன துலக்கமாகத் தென்படும்.

அது 28கிராம் அளவில் நிறையுள்ளதாகவும் 8 சென்றிமீற்றர் நீளமாகவும் இருக்கும்.



**16ஆம் வாரத்தில்:** சகல அவயவங்களும் ஒழுங்கமைந்திருக்கும். அவைகளின் அளவு வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கும். இக்காலம் ஆகும் பொழுது கருமிகவும் செயலாற்றல்களைக் கொண்டுள்ள தாய் அதன் கை, கால்களை அசைக்கும்.

அதன் நிறை 114 கிராம்களுக்கு அதிகமாவதுடன்; நீளம் 15சென்றி மீற்றர்களாகும்.



**20ஆம் வாரத்தில்:** கருவின் அசைவுகள் மிகவும் அறியப்படுவதுடன், இலகுவாக உணரப்படக் கூடியதாக இருக்கும். இருதயத்துடிப்பை இதயத்துடிப்பு மானிமூலம் அறிந்து கொள்ளலாம்.

அதன் நிறை 227கிராம் அளவில் இருப்பதுடன், 25சென்றி மீற்றர் அளவினதாகும்.




**24ஆம் வாரத்தில்:** வயிறு மேலும் விசாலமடைந்து கொண்டிருக்கும். குழந்தைகளின் தோல் சிவப்பு நிறமாகவும் மடிப்புக்கள் கொண்டதாயும் காணப்படும்.

அதன் நிறை 280கிராம் அளவில் இருக்கும் என்பதுடன், நீளம் 30சென்றி மீற்றர் அளவில் இருக்கும்.




**28ஆம் வாரத்தில்:** குழந்தையின் கண்கள் அடிக்கடி ஒரு சிறிய நேரம் திறந்திருக்கும் இக்கால எல்லையினுள் குழந்தையின் பிரசவம் ஏற்படுமாயின் குழந்தைக்கு விசேட பராமரிப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

குழந்தையின் நிறை 1.2 கி.கி அளவில் இருக்கும் என்பதுடன், நீளம் 38சென்றி மீற்றர்.



**32ஆம் வாரத்தில்:** குழந்தை தற்பொழுது முழுமையான வளர்ச்சியை அடைந்திருக்கும் அதன் அசைவுகள் மிகவும் விருத்தி அடைந்திருப்பதால் அதை வெளியாலும் காணக் கூடியதாக இருக்கும். கருவின் தோல தற்பொழுது மடிப்புக்கள் நீக்கி வழமையாகத்தலை கீழ்ப்பக்கமாகத் திரும்பியிருக்கும்.


நிறை 1.8கி.கி. அளவில் இருப்பதுடன் கருவின் நீளம் 42சென்றி மீற்றர் அளவில் இருக்கும்.





**36-40ஆம் வாரத்தில்:** இக்காலம் ஆகும் பொழுது குழந்தை தாயின் வயிற்றறையில் இருந்து வெளியே வந்து வாழக்கூடிய அளவிற்கு முதிர்ச்சி அடைந்திருக்கும் அவரது தலை மயிர்களினாலும் மூடப்பட்டிருக்கும்.

நிறை 2.7-3.4கி.கி அளவில் இருப்பதுடன் அதன் நீளம் 50சென்றி மீற்றர் அல்லது அதற்கு மேலாக இருக்கும்.

**பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகம்.**



நேற்றுமுன்தினம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஜேர்மனி பிரெட்றிக் ஈபேட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிக்மன் நைற்செல் மங்கள விளக்கேற்றுவதையும் அவர் அருகில் மன்றத்தைச் சேர்ந்த திருமதி ஐரென் கஞ்லெற் நிற்பதையும், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் க.பஞ்சலிங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

டிக்மன் நைற்செல் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் -வசந்தன்)


# கண்ணீர் அஞ்சலி

எமது மாகாணப் பணிப்பாளர்

திரு.வே.தர்மகுலசிங்கம்

அவர்களது அன்புத் தந்தையாராகிய

## கார்த்திகேசு வேலாயுதம்

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் மாகாணப் பணிப்பாளருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
*வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.*
(8924)



# 31ஆவது நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 24 . 07 . 1926

உதிர்வு 01 . 09 . 2002



## அமரர் திருமதி. அரியமலர் வேலாயுதர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்)

'அன்பின் பிறப்பிடமாக பாசத்தின்
உறைவிடமாக இருந்து எம்மை எல்லாம்
வழிநடத்தி விட்டு எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்டு விட்டீர்களே – அம்மா'

எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல், தந்தி மூலமும் பத்திரிகை மூலமும் அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், எமக்கு பல வகைகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகள்,

இன்று 01.10.2002 செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'துவாரகா'
கைதடி மேற்கு
கைதடி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


## கோப்பாயில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.1

கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் திருடியதாகத் தெரிவித்து நபர் ஒருவர் நேற்று கோப்பாய் பொலீஸாரால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

3 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான மூக்குக் கண்ணாடி மற்றும் சுவர் மணிக்கூடு ஆகியவற்றைத் திருடியதாக கனகசபை சிவகுமார் என்பவரே இவ்வாறு ஆஜர் செய்யப்பட்டவராவார். இவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

நீர்வேலி, காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபையின் வருடாந்த சமயபாட பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகவியல் துறை விரிவுரையாளர் தி. வேல்நம்பி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ. குணநாதன், நீர்வேலி கிராம சேவையாளர்கள் எஸ்.அல்பிரட், எஸ்.சண்முகவடிவேல், உடுவில் கலாசார உத்தியோகத்தர் சத்தியவாணி பிறைசூடி, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பகுதிக்கான கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை காமாட்சி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் நிகழ்த்துவார். (எ-9)


# வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி தென்மராட்சி சங்கத்தானைப் பகுதியில், கண்டி வீதிக்கு அருகில் 71/2 பரப்புக்காணியில் சகல வசதிகளுடனும், சுற்றிவர மதில் அமைக்கப்பட்ட வீடு (வருமானம் தரக்கூடிய வளவுடன்) விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:-*

கிரியோன் கூல் பார்
*நவீனசந்தை, சாவகச்சேரி.*
*மேலதிக விவரங்களுக்கு: T.P: 01-500401.*
(8911)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின்
முன்னாள் ஆசிரியை

## திருமதி பாலசிவனேஸ்வரி மனோகரன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(8920)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
மாணவி
செல்வி

## நந்தகுமார் நிரோசா

அவர்கள் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், கற்பித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் மேலதிக ஊக்கம் கொடுத்த ஆசிரியரையும் நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

அம்மா, அப்பா, தங்கை, தம்பி,
அண்ணா, சித்தப்பா, சித்தி,
லலீத் அண்ணா.

*சித்திரா அப்பளக் கம்பனி,*
*நல்லாதோட்டை, வதிரி.* (8923)

# அஞ்சல் அறிமுக அட்டையைப் பெற 2கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம்,ஒக்.1

தபால் திணைக்களத்தின் அஞ்சல் அறிமுக அட்டையைப் பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் தமக்குக் கிடைக்கவேண்டிய தினத்துக்கு குறைந்தது இரு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கும், தேசிய அடையாள அட்டை இல்லாத விடத்து பயன்படுத்தவுமே அஞ்சல் அறிமுக அட்டைக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

அண்மைக்காலமாகப் பாடசாலை மட்டத்தில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களின் ஆள் அடையாளத்தை நிரூபிக்க அஞ்சல் அறிமுக அட்டை கேட்கப்படுவதால், இதற்கென விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளதாக தபால் திணைக்கள உயர் உத்தியோகத்தர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும் அறிமுக அட்டைகளை விரைவில் வழங்குவதற்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றை உரிய நேரத்தில் வழங்குவதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

கடைசி நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் மோசடிகள் சில இடம்பெற்றுள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் இது விடயத்தில் தபால் திணைக்களம் விழிப்புடன் செயற்பட வேண்டிய நிலை உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அறிமுக அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்து தமது பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்திய பின்பு தமக்கு அருகில் உள்ள தபால் நிலையங்கள் ஊடாக அனுப்பிவைத்தால் இரண்டு கிழமைக்குள் அறிமுக அட்டையைப் பெற்றுக் கொள்ளமுடியும். (ம-10)

# யாழ். விவசாயத் துறையை மேம்படுத்த புதிய திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி விவசாயிகளின் தேவைகளுக்கு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட விவசாயக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுவின் கூட்டத்தில் இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ சாமான விதை உருளைக் கிழங்கை விவசாய சம்மேளனங்கள் ஊடாக விநியோகிப்பது. இதற்கமைய உருளைக்கிழங்கு செய்கைக் குட்படுத்தப்படும் இடங்களின் சம்மேளனங்களான உடுவில், கீரிமலை, உரும்பிராய், புத்தூர் ஆகியன தமது பகுதிக்குட்பட்ட விதை உருளைக் கிழங்கு தேவையான விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களையும், முற்பணத்தையும் பெற்று தேவையான விதை உருளைக் கிழங்கை விநியோகிக்கவேண்டும். 'டிசைரி', 'லைரா' ஆகிய இனங்கள் இதற்கென சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

★ விதை நெல் சம்பந்தமாக கமநல சேவைகள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட விதை இனங்களான ஏ.ரி.402, பி.டபிள்யூ 351 மற்றும் சிபார்சு செய்யப்பட்ட இனமான ஏ.ரி.353 ஆகியவற்றில் 1000 புசல் நெல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1000 புசல் நெல் அடுத்த தினங்களில் விநியோகிக்கப்படும்.

★ கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகள் இன்றி விதை நெல் விநியோகம் செய்யும் அரச சார்பற்ற நிறுவனங்களான பட்டினிக்கெதிரான நிறுவனம், சர்வோதயம், உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியன தமக்கென இனங் காணப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் உள்ளீடுகளை விநியோகிக்கவேண்டும்.

★ தென்னை அபிவிருத்திச் சபையினால் அச்சுவேலியில் நாற்றிடப்பட்டுள்ள 25 ஆயிரம் நாற்றுக்களை இலவசமாக யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குதல். இதில் 10 ஆயிரம் நாற்றுக்கள் மருதங்கேணிக்கும் 10 ஆயிரம் நாற்றுக்கள் சாவகச்சேரிக்கும் 5ஆயிரம் உயர் இன தென்னை நாற்றுக்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் தலா 500 என்ற ரீதியிலும் வீட்டுத் தோட்டச் செய்கைக்கு வழங்குதல்.

★ உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட அனுமதியளிக்கப்பட்ட 30 குளங்களில் மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள 8 குளங்கள் தவிர ஏனைய குளங்களை விவசாயிகளின் உதவியுடன் புனரமைத்தல். இவர்களுக்கான உலர் உணவை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வவுனியாவில் இருந்து எடுத்துவருதல்

★ இவ்வருடத்தில் 6 ஆயிரம் ஹெக்டேயரில் நெல் பயிரிடுதல்

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை, கமநல உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-8)

# கொத்மலை திட்டத்தை நிறைவேற்றுவோமென சில அரசியல்வாதிகள் கங்கணம் கட்டுவதேன்?

## அமைச்சர் ஆறுமுகம் கேள்வி; ஒருபோதும் அனுமதியேன் என்கிறார்

மேல் கொத்மலை நீர்மின்சாரத் திட்டம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக பிரதமருடன் பேசினேன். அப்பொழுது அந்தப் பாதிப்புக்களை தடுத்து நிறுத்துவதற்த சட்டம் கொண்டுவரப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார். ஆயினும், சில மலையக அரசியல்வாதிகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்று கங்கணம் கட்டி நிற்பது ஏன் என்று தெரியவில்லை.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் தலவாக்கலையில் நடைபெற்ற எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் மூவின மக்களும் பாதிப்புக்குள்ளாவார்கள். மலையகத்தின் பல இயற்கை வளங்கள் அழிந்துவிடும் இந்த அனர்த்தத்தை அறிந்தே மல்வத்தை மகாநாயக்கர் ரம்புக்வெல்ல விபஸ்ஸி தேரர் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க நேரடியாக இங்கு வந்துள்ளார். அரசியல்வாதிகளால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் வரும்போது அவற்றைத் தீர்த்துவைக்க ஆன்மீகவாதிகளிடம் செல்லவேண்டி கட்டாயம் எழுந்துள்ளது.

இந்தத்திட்டத்தை செயற்படுத்த இ.தொ.கா. ஒருபோதும் அனுமதிக்காது. சகல மக்களையும் இணைத்து அதற்கு எதிராக போராடுவோம். தலவாக்கலை நகரில் இனங்களுக்கிடையில் வன்செயல்களை இங்குள்ள சில அரசியல்வாதிகள் தூண்டிவிட்டு வந்தார்கள். அப்படியான ஒருநிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே மகாநாயக்க தேரரை நாம் நாடிச் சென்றோம்.

எமது போராட்டத்திற்கு இன, மத பேதமின்றி சகலரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். பிழையான ஒரு திட்டத்தை தவறான தகவல்களைக் கொடுத்து நடைமுறைப்படுத்த மலையக அரசியல்வாதிகள் சிலர் முயன்று வருகிறார்கள். எமக்குப் பின்னால் மக்கள் சக்தியுள்ளது என்பதை நாம் இன்று நிரூபித்துள்ளோம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

மல்வத்தை பீடாதிபதி மகாநாயக்கர் ஸ்ரீ விபஸ்ஸி தேரர் பேசியதாவது:-

மேல் கொத்மலைத் திட்டம் மலையகத்திலுள்ள இயற்கை வளங்களை இல்லாதொழித்து இயற்கை அனர்த்தங்களை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். இதை நடைமுறைப்படுத்த நான ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

இந்தத்திட்டத்தைப்போல் விக்ரோறியாத் திட்டம் கொண்டுவரப்பட்டபோதும் நான் அதை எதிர்த்தேன். அப்போதிருந்த ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தன அந்தத் திட்டத்தின் ஊடாக இந்தியாவுக்கும் மின்சாரம் வழங்கமுடியும் என்று கூறினார். ஆனால், இன்று அந்தப் பிரதேசத்தில் உள்ள இயற்கை வளங்கள் அழிந்து போய்விட்டன. (ஐ-5)

# மாணவனை அறையில் போட்டு பூட்டி ஆசிரியர் கிரிக்கெட் மட்டையால் தாக்குதல்!

பாடசாலை நேரத்தில் மாணவனொருவன் அறையொன்றினுள் பூட்டி வைக்கப்பட்டு கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்டார் என்று சம்மாந்துறை பொலீஸிலும், கல்முனை மனித உரிமை ஆணைக்குழுப் பணிமனையிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் காரைதீவு கோட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலை ஒன்றில் நடந்துள்ளது.

தாக்கப்பட்ட மாணவன் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறினார். சம்மாந்துறை பொலீஸார் பாடசாலைக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இது இவ்வாறிருக்க, தாக்கியதாகக் கூறப்படும் ஆசிரியர் இரவு வேளையில் தாக்கப்பட்டார் என்று சம்மாந்துறைப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் இதுபற்றிக் கூறுகையில் "ஆசிரியர் தண்ணீர் கேட்டதற்கு பிரஸ்தாப மாணவன் மறுத்திருக்கிறார். பதிலுக்கு ஏசினார் எனவும் அறிகிறேன். மாணவன் தாக்கப்பட்டாரா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது"- என்றார்.

மாணவனின் உறவினர் ஒருவர் தன்னை ஏசினார் என்று அதிபரும் பொலீஸாரிடம் முறையிட்டுள்ளார். (ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு தற்காலிக விரிவுரையாளர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய கல்வி ஆண்டுக்காக 150 இற்கும் மேற்பட்ட கல்விசார் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்காலிக விரிவுரையாளர்கள், கட்டுரையாசிரியர்கள், போதனாசிரியர்கள் மற்றும் பகுதிநேர விரிவுரையாளர்களே நியமிக்கப்பட்டிருப்பதாக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் இன்று தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்பர்.

புதிய நியமனம் பெறுவோருக்கான கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு பௌதீகத்துறை விரிவுரை மண்டபத்தில் துணைவேந்தர் தலைமையில் நடைபெறும். (ஐ)

# கெஞ்சிய எங்களை கொஞ்சமும் இரக்கமின்றி சுட்டுக் கொன்றனர் காவலில் நின்ற பொலீஸார்!

## பிந்துனுவெவ முகாம் படுகொலை விசாரணையில் சாட்சி

கொழும்பு,ஒக்.1

"எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று அங்கு நின்ற பொலீஸாரிடம் கெஞ்சினோம். அவர்கள் முதலில் வானத்தை நோக்கிச் சுட்டார்கள் பின்னர் எங்களை நோக்கிச் சுட்டார்கள். எங்களோடு இருந்தவர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே விழுந்து மரணமானார்.

- இவ்வாறு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடைபெற்ற பிந்துனுவெவ முகாம் படுகொலைகள் சம்பந்தமான 'ட்ரயல் அட்பார்' விசாரணையின் போது சாட்சியமளித்த மட்டக்களப்பைச் சேர்ந்த பெருமாள் ஈஸ்வரன் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி பண்டாரவளை பிந்துனுவெவ முகாமில் இடம்பெற்ற படுகொலைகளில் சம்பந்தப்பட்ட 41 சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டு 'ட்ரயல் அட்பார்' முறையில் விசாரணை நடைபெற்றுவருகிறது. இவர்களுக்கு எதிராக 83 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருக்கின்றன.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் சரத் அம்பேபிடிய (தலைவர்), எரிக் பஸநாயக்கா, உபாலி விஜயரட்ண ஆகியோர் இவ்வழக்கை விசாரணை செய்து வருகின்றனர். பெருமாள் ஈஸ்வரன் அங்கு சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

ஒருவருட காலம் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்தேன். பின்பு ரெலோ இயக்கத்தில் இணைந்தேன். ரெலோ இயக்கத்தினர் என்னை நாசகார தடுப்புப்பிரிவினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் என்னை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் சேர்ப்பித்தனர்.

நான் முகாமிற்கு வந்து ஏழு நாள்களுக்குப்பின்பே படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் நடைபெற்ற அன்று அதிகாலையிலேயே முகாமில் பதட்டம் ஏற்படலாயிற்று. கற்கள் முகாமிற்குள் வந்து விழத்தொடங்கின. கிராமத்தவர்கள் அநேகர் கோடாரி, கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் முகாமிற்குள் வர எத்தனித்தனர்.

நாங்கள் பலர் ஒன்று கூடி பொலீஸாரிடம் சென்று "எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினோம். அவர்கள் தங்களிடமிருந்த துப்பாக்கிகளால் வானத்தை நோக்கிச் சுட்டனர். பின்பு எம்மையும் நோக்கிச் சுட்டனர்.

பொலீஸாருக்கு அருகில் நின்ற வாகனத்திற்குள் போய் உட்கார்ந்து கொண்டோம். சிறிது நேரத்தில் நான் மயக்கமுற்றேன். பண்டாரவளை வைத்தியசாலையில் தான் எனக்கு சுயநினைவு வந்தது. பின்பு நான் தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டேன்.

- இவ்வாறு சாட்சி கூறினார். விசாரணை நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறும். (ஐ-5)

# சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர்களாக மூவர் நியமனம்

கொழும்பு,ஒக்.1

பிரதிப் பொலீஸ்மா அதிபர்களாக மூவர் நியமிக்கப்பட்டனர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழு இந்த நியமனங்களை வழங்கியிருக்கிறது.

காமினி ரன்தெனிய, இந்திராடி சில்வா, ஜெயதிஸ்ஸ ஹேரத் ஆகியோரே இம் மூன்று பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுமாவார். சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் பதவிகள் சில காலமாக வெற்றிடங்களாக இருந்து வந்தன. இதேவேளை, பொலீஸ்மா அதிபர் பதவி இன்னமும் காலியாக உள்ளது. (ஐ)

# செங்குந்த இந்து பரிசளிப்பு விழா

யாழ்.செங்குந்த இந்துக்கல்லூரியின் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கொழும்பு பிராந்திய தொலைத்தொடர்பு நிலைய முகாமையாளர் வி.யோகேந்திரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் வ.ஸ்ரீதரன் நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்துவார். (ஐ-ரி)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனிகாந், மனிஷா, கவுண்டமணி நடித்த

(சில்லி)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.தே.)
(8919)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
CONNIE NIELSEN, RICHARD HARRIS
IN
GLADIATOR (சில்லி)
தமிழாக்கம்
அடிமை வம்சம்
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-23810)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
அஜித், சாலினி, நாசர்
நடித்த
அமர்க்களம்
காட்சிகள்:10.30, 2.30, 6.30
(C-23958)

# மரண அறிவித்தல்

## பற்குணராசா பரமேஸ்வரி

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பற்குணராசா பரமேஸ்வரி நேற்று (30.09.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் பற்குணராசா அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் தனபாலசிங்கம், பரஞ்சோதியம்மா, மங்கையர்க்கரசி, காலஞ்சென்றவரான சிவபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் திருநாவுக்கரசு (இந்தியா), வடிவாம்பிகை, காலஞ்சென்ற நடேசமூர்த்தி, பத்மாவதி, இந்திரா, றமணி (சுவிஸ்) மகேஸ்வரன் (கனடா), கண்ணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 72, சீனிவாசகம் வீதி கொட்டடியில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (1.10.2002) பி.ப 3 மணியளவில் தகனக்கிரிகைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*72, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.தனபாலசிங்கம் (சகோதரர்)
தாரணி களஞ்சியம், சாவகச்சேரி

(8931)

# கட்டுநாயக்கா விமானப்படையினரின் சம்பளப்பணத்தில் ரூ.1000 கள்ளநோட்டு!

கொழும்பு,ஒக்.1

கட்டுநாயக்கா விமானப்படை உத்தியோகத்தர்களின் இந்த மாதச் சம்பளப் பணத்தில் ஆயிரம் ரூபா போலிநாணயத் தாள்கள் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி விரிவான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இரகசியப் பொலீஸாரும் நீர்கொழும்புப் பொலீஸ் தலைமை அலுவலகமும் விமானப் படையினரும் கூட்டாக இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விமானப் படையினருக்கு சம்பளம் வழங்குவதற்கென சுமார் மூன்றரைக் கோடி ரூபா பணம் நீர்கொழும்பிலுள்ள அரச வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டுள்ளது.

விமானப் படையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தனது சம்பளப்பணத்தை பொத்துகர பிரதேசத்தில் உள்ள வங்கியொன்றில் வைப்புச்செய்ய சென்றபோது இந்த கள்ள நோட்டுக்கள் பற்றிய விவரம் தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து அந்தப் பெண் உத்தியோகத்தர் கட்டுநாயக்கா விமானப்படை நிர்வாக அதிகாரிகளுக்கு இதுபற்றி தகவல் தெரிவித்தார். பேராதனையில் வசிக்கும் மற்றுமொரு விமானப் படை அதிகாரியின் சம்பளப் பணத்திலும் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் இருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமானப் படையினரின் சம்பள பணத்தில் கலக்கப்பட்டிருந்த 14 போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இது வரைகண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சம்பளப்பணத்துடன் கலக்கப்பட்டுள்ள நோட்டுக்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்குமென சந்தேகிக்கப்படுகிறது.

இந்த கள்ளநோட்டுக்கள் சம்பளப் பணத்தில் எப்படிச் சேர்க்கப்பட்டது என்பது இதுவரை மர்மமாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## சிறுவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கெட் ஆர்வலர்களைச் சந்திப்பர்.

சிறுவர்களோடு அவர்கள் அங்கு கலந்துரையாடி 'ஓட்டோக்கிராபில்' கையெழுத்திடுவர்.

இந்த நிகழ்வில் சிறுவர்களையும், பாடசாலை மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

'சக்தி' வானொலியின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பதினைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பு ஆகியவற்றில் காயங்கள் காணப்படுகின்றன.

- இவ்வாறு சிறுமியின் உடலை பிரேத பரிசோதனை செய்த ஏறாவூர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.சுகுமார் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் ஏ.எல்.எம்.கபூர், மரண விசாரணைகளை மேற்கொண்டார் சிறுமியின் சிறுவயதிலேயே அவரது தாய், தந்தையர் காலமாகிவிட்டனர். பேர்த்தியான தாண்டவராசா அமராவதி (வயது 60) சிறுமி சுதாமலரையும் அவரது தங்கை சுதர்சினியையும் மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியில் சேர்த்துப் படிப்பித்தார். முன்னர் இவர்கள் வந்தாறுமூலையில் வசித்து வந்தனர். கடந்த 8 மாதங்களுக்கு முன் மாவடிவேம்புக்கு பேர்த்தியார் வந்து குடியேறினார். அவருடன் சுதாமலரும் 8ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு வந்துவிட்டார். (ஐ-5)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விகற்ற கௌரவமான நபர்கள் யாரும் இல்லாமை தற்போது என்னையும் வேறு ஒரு சிலரையும் தவிர அரசியலில் சாதுரியமாக செயற்படக் கூடிய எவரும் இல்லை.

இன்று அரசியலில் தலைதூக்கி இருப்பது தமது வயிற்றினை வளர்த்துக்கொள்ளும் ஒரு கூட்டமே.கடந்த காலத்தில் புத்திஜீவிகளை அரசியலினுள் கொண்டுவர நான் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

- என்றார் ஜனாதிபதி. (ஐ-5)

## மனிதாபிமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி, விவசாயம், மீன்பிடித்தொழில், நல்ல குடிதண்ணீர் விநியோகம் ஆகியவற்றுக்கு இந்தக் குழு முன்னுரிமை வழங்கும் இடம்பெயர்ந்து இருப்பவர்களை ஆகக் குறைந்த கால எல்லைக்குள் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு என்ன செய்யலாம் என்பதையும் குழு ஆராயும்.

யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு குழுவினர் நேரில் சென்று நிலைமைகளை அவதானிப்பார்கள்.

அரசாங்க அமைச்சுக்களின் அதிகாரிகள், புலிகள் பிரதிநிதிகள், உள்ளூராட்சி அதிகாரிகள், ஐ.நாவுடன் இணைந்த நிறுவனங்கள், பிரதான உதவி வழங்கும் நிறுவனங்கள், அரச சார்பற்ற பொதுநல நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரையும் குழுவினர் சந்தித்துப் பேசுவர். (ஐ)

## 19ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாவது:-

19ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தம் தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம். எமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தனியான நிர்வாக அலகை வழங்க பிரதமர் இணங்கினால் 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்போம். ரவூப் ஹக்கீமின் தலைமையின் கீழ் செயற்பட நாம் தயாராக இருக்கிறோம். அவருக்கு எதிராகச் செயற்பட்டால் முஸ்லிம் மக்களுக்கே அதனால் பாதகம் ஏற்படும். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினையை அறிந்து அவர் செயற்படுவாரேயானால் அவர் தலைவராக இருப்பதில் பிரச்சினை இல்லை.

ஆயினும், கடந்த எட்டு மாதங்களில் அவர் பல தவறுகளைச் செய்திருக்கிறார். அத்தவறுகளை அவர் மேலும் செய்வாரேயானால் தமக்கென ஒரு தலைவரை தெரிவுசெய்ய கிழக்கு முஸ்லிம்கள் முயற்சிப்பார்கள். அரசு - புலிகள் உடன்படிக்கையை அவர் ஆதரித்தது தவறாகும். அந்த உடன்படிக்கையில் முஸ்லிம் மக்கள் குறித்த ஒரு சொல் கூட இல்லை. ஹக்கீம் - பிரபா உடன்படிக்கை குறித்து முஸ்லிம் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுமாறு நூறு தடவைகள் கோரினேன்.அவர் அவ்வாறான ஒரு கூட்டத்தைக் கூட்டவில்லை.

முஸ்லிம் மக்களுக்காக எமது வேறுபாடுகளை மறந்து ஐக்கியப் படுவோம் என்ற அடிப்படையிலேயே ஐக்கியமாகச் செயற்பட முயலுகிறோம்.

- இவ்வாறு அவர் பேட்டியில் கூறியிருக்கிறார். (ஐ)

# மயிலந்தனை வழக்கு நாளை விசாரணைக்கு!

கொழும்பு,ஒக்.1

மயிலந்தனை படுகொலை விசாரணை நாளை கொழும்பு மேல் நீதிமன்றில் சிங்களம் பேசும் ஜூரிமார் முன்னிலையில் ஆரம்பமாக இருக்கின்றது.

இந்த வழக்கில், பத்து வருடங்களுக்கு முன்னர் 35 தமிழ்ப் பொது மக்களைக் கொலை செய்ததாகவும் 24 தமிழர்களைக் கொலை செய்ய முயன்றதாகவும் இலங்கை இராணுவத்தின் 21 சிப்பாய்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 13 பெண்கள் உட்பட 30 தமிழர்கள் - இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டியுள்ளது. (ஐ)

## மாணவியுடன் மோதிய டிராக்டர் தீயிடப்பட்டது!

அக்கரைப்பற்று,ஒக்.1

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பில் பாடசாலை மாணவியான தமிழ்ச் செல்வி (வயது18) என்பவர் டிராக்டருடன் மோதி விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவத்தால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட டிராக்டரைத் தீயிட்டுக் கொளுத்தினர். டிராக்டரின் சாரதியை பொலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு இன்று முத்திரை வெளியீடு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களம் 4ரூபா ஐம்பது சதம் பெறுமதியான புதிய முத்திரையொன்றை அச்சிட்டுள்ளது.

புதிய முத்திரை இன்று மாலை 4மணிக்கு ஸ்ரீஜெயவர்த்தன புரவில் உள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மண்டபத்தில் வெளியிட்டுவைக்கப்படும்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்க ஆகியோர் இவ்வைபவத்தில் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொள்வர். (ஐ)

## ஏழு படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியல் பணிமனையில் பொறுப்பாளர் கலை.அரசனுடன் தமது பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக அவர்கள் பேச்சு நடத்தினர்.

இப்பேச்சுக்களின்போது வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் எவரும் பங்குபற்றவில்லை. ஆனால், பெரும்பான்மை இனப் பத்திரிகையாளர் ஒருவர் மட்டும் வந்திருந்தார் என கலை அரசன் தெரிவித்தார்.

இராணுவமே புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக மீறல்களை மேற்கொண்டுள்ளது. எமது பிதேசத்திற்குள் ஆயுதங்களுடன் வந்த இராணுவத்தினர், அங்கு வைத்து எமது இயக்க உறுப்பினர்கள் இருவரைக் கைதுசெய்து தற்போது தடுத்து வைத்துள்ளனர்.

ஆனால், ஒப்பந்தத்தை மீறி எமது பிரதேசத்திற்குள் ஆயுதங்களுடன் வந்தவர்களையே நாம் தடுத்து வைத்துள்ளோம். எம்மவர்களை விடுதலை செய்யும்வரை இராணுவ வீரர்கள் ஏழு பேரையும் விடுதலைசெய்வது முடியாத ஒரு செயல். இப்படி கலை அரசன் இராணுவத்தினரின் பெற்றோரிடம் கூறியிருக்கிறார். இவற்றையெல்லாம் இராணுவத்தினரிடம் எடுத்துக் கூறுவதாகக் கூறிய பெற்றோர், வெறும் கையுடன் திரும்பினர். (ஐ)


பாராட்டி வாழ்த்துதலும் பிறந்தநாள் வாழ்த்தும்



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த

செல்வன் லோகேஸ்வரன் யதூஷன்

2002ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர், வே.அன்பழகன் அவர்களையும் மற்றும் அவருக்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் திருநெல்வேலி ஞானக்குழந்தை கல்விநிலையத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (1.10.02) செவ்வாய்க்கிழமை செல்வன் யதூஷனின் 10 ஆவது பிறந்தநன்நாளில் பல்கலையும் கற்று பல்கலைக்கழகம் சென்று பெருவாழ்வு வாழ வாழ்த்தும், அப்பா, அம்மா, தங்கை ஆரபி தம்பி நிருஷன், அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் நண்பர்கள் அனைவரும் முத்துமாரி அம்மன் துணையுடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

யதூஷ் விடியோ அன் போட்டோ.
15/12 மாரிஅம்மன் வீதி,
திருநெல்வேலி.

வாழ்த்தும் நன்றியும் கூறும்:
இ. லோகேஸ்வரன்
(அப்பா - ஈசன்).

(8935)

BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்

A/L 2003

பௌதிகம்
ஓட்ட மின்னியல்

By: ஜெயசீலன்

ஆரம்பம்: 02.10.2002 Wed. 4.00

(8895)

விற்பனைக்கு

இங்கிலாந்து LISTRA எஞ்சின் 2 சிலிண்டர் 20KV ஏயர் கூலர் Standard Pistan Single phase நல்ல நிலையிலுள்ளது. மற்றும் வீடியோ புறொஜெக்டர் (10அடி திரையில் படம் காண்பிக்கக்கூடியது) விற்பனைக்கு உண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம்.

தொடர்பு: S.K.நல்லதம்பி
லிபேட்டி சினிமா,
அச்சுவேலி.
T.P.: 070 - 212223

(8834)

2002 O/L மாணவர்களுக்கான

அதிரடி வெளியீடு



வணிகக்கல்வியும் கணக்கீடும்

(புதிய பாடத்திட்டத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டது)

கணக்கீடு: முற்றிலும் எதிர்பாக்கப்படும் 100 கணக்குகள்

யாழ்-நகர் - பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா (சுன்னாகம்)

தீவகம் - மணிகல்வி நிறுவனம், வடமராட்சி-பிரியங்கா, நாவலர்

கிளிநொச்சி - அறிவமுது, வவுனியா - கவிதா, கொழும்பு - பூபாலசிங்கம்.

(89344)

எக்ஸ்போ ஏவியேசனின் விமானசேவை

எமது விமானசேவையின் இன்று (01.10.2002) செவ்வாய்க்கிழமைக்கான விமான பயண நேரம் தவிர்க்கமுடியாத காரணத்தினால், காலை 10.00 மணியிலிருந்து பி.ப. 5 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, இத்தினத்தில் பயணம் செய்ய பதிவுசெய்த பயணிகள் அனைவரும் பி.ப 1.00 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதனால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

இதுபற்றிய மேலதிக விவரங்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும்.

T.P.No : 021- 2223891
077- 730555 , 077-730666

(C/24014)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!

10 மாதகாலத்தினுள் ஆங்கிலத்தைப் பிறர் உதவியின்றி வாசித்துப் புரிந்துகொள்ளவும் சுயமாக இலக்கணப் பிழையின்றி கருத்துள்ள வசனங்கள் அமைக்கவும் பயிற்றுவிக்க நாங்கள் தயார்! நீங்கள்???

ஆரம்பம்: 06.10.2002

By: K.T.Rajah
T.P.: 021-2222588 (Home)
077-174512 (Hand Phone)

ENGLISH ACADEMY
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(8893) பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூ.1,500/= மட்டும்.

MCS

324 பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

சான்றிதழ் வழங்குதல்



எமது நிறுவனத்தில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து இதுவரையிலும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.